# சத்தியவழி பிரசங்கங்கள்

மலர் 20

பி. ஆர். சாமி

PUBLISHED BY
WORLD LITERATURE PUBLICATIONS
POST BOX. 8405, BANGALORE-560 084.

# முகவுரை



பழைய ஏற்பாட்டில் உள்ள "யோபு" புத்தகத்தை எப்பொழுதாவது படித்திருக்கிறீர்களா? இல்லை என்றால், அவசியம் அதை வாசிக்க வேண்டும். உங்களுக்கு பிரச்சனைகள் உண்டு என்று நீங்கள் நினைத்தால், யோபுவின் கஷ்டங்கள் பாடுகள் இவற்றை வாசிக்கும் வரை பொறுத்து இருப்பீர்களா? தன் பிள்ளைகள், சொத்துக்கள் இவற்றை பறி கொடுத்து விட்டு, அவனுடைய நண்பர்கள் அவனை தவறாக புரிந்துகொண்டும், மனைவியால் கைவிடப்பட்டு, உடலெல்லாம் கொப்புளங்களால் வாதிக்கப்பட்ட நிலையிலும், தேவனுக்கு உண்மையுள்ளவனாக இருந்தவன்.

இந்தியாவில் அதிக மக்கள் தொகை உண்டு. அவர்களுக்கு துன்பங்கள் அனேகம். யோபு புத்தகத்தைப் படித்தால் பயனுள்ள எத்தனையோ பாடங்கள் உள்ளன.

பெங்களூரைச் சேர்ந்த நம் வானொலி பிரசங்கியார், சகோ பி. ஆர். சாமி அவர்கள் இந்த பாடத் தொகுப்பை எழுதி பதிவு செய்துள்ளார். யோபுவுக்கு வந்த துன்பங்கள், சோதனைகள், ஏமாற்றங்கள் மற்றும் அவனுடைய நண்பர்கள், சந்தேகங்கள் இவற்றை விவாதித்து, பின்பு எவ்வாறு யோபு இறுதியில் இவைகளின் மீது வெற்றி சிறந்தான் என்று கூறுகிறார்.

இதிலிருந்து என்ன முடிவுக்கு வரலாம் என்றால் நம்முடைய பிரச்சனைகள், பாடுகள் அல்லது நம் ஜீவியத்தில் வரக்கூடிய வேதனைக்குரிய காரியம் எதுவானாலும், தேவனுடைய துணை கொண்டு, நாமும் இவைகளை மேற்கொள்ளலாம்.

எது எப்படி நடந்தாலும், தேவனை மாத்திரம் குற்றம் சுமத்தக்கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது. மனிதனுடைய அனேக பிரச்சனைகளுக்கு அவனே பொறுப்பாளி. குற்ற மற்றவர்கள் பாடுபடுவதும் கூட மனிதன் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ இவ்வுலகில் பாவத்தை கொண்டு வந்ததன் விளைவே.

ஆகையினால் நம் பிரச்சனைகளுக்கு தேவனை குற்றம் சுமத்துவது தவறு. தேவன் நம்மீது அக்கரை உடையவர். நாம் சிறந்ததைப் பெற வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறார். நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர் கேட்டு கொண்டிருக்கிறாரோ அதை செய்தால், அது நமக்கு நன்மையாக இருக்கும்.

பேச்சாளர் அவர்களையும், அவர் பிரசங்கங்களையும் பாராட்டுகிறேன். இலங்கை வானொலி ஆசிய சேவையில் ஒலி பரப்பாகும். "சத்திய வழி" நிகழ்ச்சிகளை கேளுங்கள். இந்த பிரசங்கங்களையும் படியுங்கள். இவை இரண்டினாலும் பயனடைவீர்கள்.

புது டில்லி
23—10—1989.

இப்படிக்கு,
ஜே. சி. சோட்

# என்னுரை!

"இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்" என்று நீதிமொழிகளில் ஞானி சாலமோன் உரைத்திருக்கிறார். வாழ்க்கையில் தான் எத்தனை விதமான கசப்பான அனுபவங்கள், துயரங்கள், தொல்லைகள்! இவற்றிற்கு முடிவே இல்லையா? பிரச்சனையிலிருந்து விடுதலை பெற வழியே இல்லையா? என்று குமுறி அழும் பல்லாயிரக்கணக்கான வானொலி நேயர்கள் கண்ணீருடன் எழுதிய கடிதங்கள் என் நெஞ்சத்தை தொட்டது. முடிவு காண வேதாகமத்துக்குச் சென்றேன். கசப்பை மாற்றி வாழ்க்கையை இனிக்க வைக்க கிறிஸ்து ஒருவரால் தான் முடியும் என்பதை உணர்ந்தேன். நண்பன் யோபு எனக்கு உதவி செய்தான். யோபுவைப் போலவே நீங்களும் துன்பம் என்னும் புயலில் சிக்கி அலைக்கழிக்கப்பட்டிருந்தால், உலகமே சூன்யமாகிப் போய்விடுமளவிற்கு நீங்கள் சோதிக்கப் பட்டிருந்தால், இதோ உங்களை தேற்ற நண்பன் யோபு வருகிறான். ஏன் என்னைக் கூட அவன் தான் உற்சாகப்படுத்துகிறான். உங்கள் பிரச்சனையின் ஆழத்தை என்னால் அறிய முடியாது. ஆனால் மனுஷருள்ளத்திலிருப்பதை அறியவல்ல கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களை அறிவார். உங்களுக்கு உதவ ஆயத்தமாயிருக்கிறார். அவர் கரங்களில் உங்களை ஒப்புக் கொடுங்கள். இம்மையில் பரிபூரண ஜீவனையும், மறுமையிலே நித்திய நாளுக்கான நம்பிக்கையையும் அவர் உங்களுக்குத் தருவார். அவர் நம்மைப்போல் சோதிக்கப் பட்டவர். பாடு அனுபவித்தவர். அவர் ஒருவரே நம்மை ரட்சிக்க வல்லவர்.

இச்சிறு நூலைப் படிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் அவர் பிள்ளையாகி, அவர் சமாதானத்தைப் பெற்று இவ்வுலகில் பாடுகளுக்கு மத்தியில் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டும் என்பதே என் ஜெபமாகும்.

இப்படிக்கு,

ஊழியன் **பி. ஆர். சாமி**
கிறிஸ்துவின் சபை
7, டேவிஸ் ரோடு, பெங்களூர்—560 084.

உலகத்திற் கொருவழி உருபட தனிவழி
ஓங்கிய சத்தியவழி
பலநிலை கடந்தவர் பெரியரும் சிறியரும்
போற்றிடும் சத்தியவழி !
அலையினில் சுழல்பவர் மலையினில் தவிப்பவர்
ஆறுதல் காணும்வழி
இலைஇலை இணைஇலை விலையிலை எல்லைஇலை
இயேசுவின் சத்தியவழி !

நிறைமதி -ஞா. பூசணதாசன்
பெங்களூர்.

பாட. தலைப்புகள் : மூலம் — "பொன்னைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற" — லாத்திபெத் ஆப்ஸ்.

அட்டை படம் : ஜே. ஏ. ஜேக்கப், ஹைதராபாத்.

First Printing (1977) - 2000 Copies.
Second Printing (1991) - 2000 Copies.

# அன்பின் வேண்டுகோள்

பிரியமுள்ள வாசக நண்பனே,

நீங்கள் இப்புத்தகத்தைப் படித்து முடித்ததும் உங்கள் நண்பர்களுடன் இதை பகிர்ந்து கொள்ளுங்கள். யோபுவின் சரித்திரத்தை வேதாகமத்திலும் வாசியுங்கள். அப்பொழுது கஷ்டங்களைப் பற்றிய சரியான மனோநோக்கு என்ன என்பதை புரிந்து கொள்வீர்கள். பாடுகளுக்கு மத்தியில், நோய்களுக்கு மத்தியில், யோபைப் போல சவாலுடன் வாழ உங்களுக்கு விருப்பமா?

"என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று சொல்லுகிறார், கிறிஸ்துவின் சீடனாகிய பவுல்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளாக செய்ய வேண்டுவதெல்லாம்,

1. இயேசு கிறிஸ்துவை, தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, [யோவான் 8 : 24; எபி. 11 : 6]
2. பழைய பாவங்களை விட்டு முற்றிலுமாக மனந்திரும்பி, [லூக்கா. 13 : 3; அப். 17 : 30]
3. இயேசு கிறிஸ்துவை வாயினால் மனுஷர் முன்பாக அறிக்கையிட்டு, [மத்தேயு. 10 : 32; ரோமர். 10 : 9, 10]
4. பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். [மத்தேயு. 28 : 18–20; அப். 2 : 38]

அப்பொழுது இயேசுவின் விலையேறப்பட்ட ரத்தத்தால் கழுவப் பட்டு, புதுச் சிருஷ்டியாக, கிறிஸ்துவின் சபையில் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப் படுகிறீர்கள். [அப். 2 : 47]

பரிசுத்த ஆவியானவர் பரிசாக (gift) கிடைக்கிறார் [அப். 2 : 38]. அவர் உங்களில் தங்கி வாசஞ் செய்கிறார். வேத வாக்கியங்கள் மூலம் வழி நடத்துவார். [ரோமர். 8 : 9, 14] [2, தீமோ. 3 : 16, 17]. மரண பரியந்தம் உண்மையுள்ளவனாக, தேவ சித்தத்திற்கு கீழ்படிந்து, அவருக்கு சாட்சியாக வாழ்ந்தால், நித்திய வாழ்வை அடைவீர்கள்.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

இறை பணியில்,
ஆசிரியர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | யோபுவின் சரிதை—கதைச் சுருக்கம் | 1 |
| 2 | யோபுவின் பொற்காலம் | 6 |
| 3 | சாத்தானின் சோதனே | 10 |
| 4 | சாத்தானே மேற்கொள்வது எப்படி? | 14 |
| 5 | யோபுவின் வேதனே | 17 |
| 6 | கஷ்டங்களேப்பற்றிய நம்முடைய மனேநோக்கு | 21 |
| 7 | யோபும் அவன் நண்பர்களும் | 25 |
| 8 | யோபுவின் உள்ளான குழப்பம் | 28 |
| 9 | அன்புக்குப் பாத்திரமானவர்களால் யோபுக்கு வந்த ஏமாற்றம் | 32 |
| 10 | யோபுவின் ஆவிக்குரிய சந்தேகங்கள் | 36 |
| 11 | தேவனுடைய ஞானம் | 40 |
| 12 | துன்மார்க்கர்மேல் பொறுமை கொள்ளாதே | 44 |
| 13 | எலிகூவின் தர்க்கம் | 48 |
| 14 | தேவனுக்கு முன்பாக மனிதன் நீதிமானுயிருப்பது எப்படி? | 52 |
| 15 | தேவனுடைய எதிர்க் கேள்விகள் | 55 |
| 16 | விசுவாசத்தின் வெற்றி | 59 |
| 17 | கஷ்டம் ஏன் வருகிறது ? | 63 |

# யோபுவின் சரிதை

## கதைச் சுருக்கம் :

**பி**ரியமுள்ள வானொலி நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலான நாமத்தில் என்னுடைய வாழ்த்துதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கிறிஸ்துவின் சபையாரால் நடத்தப்பட்டு வரும், மற்றொரு வானொலி நிகழ்ச்சியில் உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் வாழும் இந்த உலகம் பலப்பல பிரச்சனைகளால் நிறைந்துள்ளது. நாம் தாயின் வயிற்றில் உருவாக்கப்படும் போது தாய்க்கு பிரச்சனை. வளரும் பருவத்தில் தகப்பனுக்கு பிரச்சனை. திருமணம் செய்துகொண்டு இல்லறத்தை நடத்த ஆரம்பித்து விட்டாலோ நமக்குப் பிரச்சனை. பின்பு மரிக்கும் பொழுதோ மனைவி பிள்ளைகளுக்கு பிரச்சனையை விட்டு செல்கிறோம். இப்படியாக நாம் பிரச்சனையிலே பிறந்து, வாழ்ந்து, பிரச்சனையிலே மரிக்கிறோம். பிரச்சனையில்லாத மனிதனை சந்திக்க முடிவதில்லை. எங்கும் யாவருக்குமுள்ள பொதுவான அம்சம் பிரச்சனைதான். பிரச்சனையை முற்றிலும் சமாளிக்க மனிதன் எத்தனையோ பிரயத்தனம் செய்கிறான். ஆனால் ஒரு பிரச்சனை தீர்ந்தால் மற்றொன்று வந்து விடுகிறது. ஏன் இந்தப் பிரச்சனைகள்? பிரச்சனைகளிலிருந்து மனிதனுக்கு விடுதலை கிடையாதா? என் வாழ்வில் நிம்மதி என்பது வராதா என்று குமுறும் பல்லாயிரக்கணக்கான இதயங்களை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

கண்ணுக்கு கண்ணான தன் ஒரே பிள்ளையை பறிகொடுத்துவிட்டு கதறும் தாயின் ஈனக்குரல்!

தன் அருமை மைந்தன் விபத்தில் மடிய, உயிரற்ற அந்தச் சடலத்தைக் கட்டிப் பிடித்து குமுறி அழும் தகப்பனின் விம்மும் குரல்!! தாயையும், தகப்பனையும் இழந்து அனாதையாகிவிட்ட பிள்ளைகளின் நெஞ்சைப் பிளக்கும் கதறல்!!!

கொடிய வியாதியின் கோரப் பற்களில் சிக்கி, வலிமை இழந்து, உருவழிந்து, நடைபிணமாகத் திரியும் எத்தனையோ ஆயிரமாயிரம் துர்பாக்கிய சாலிகளின் அழும் குரல்!!!!

இவர்கள் அனைவரும் கேட்கும் ஒரே கேள்வி : ஏன்? ஏன் இந்தப் பிரச்சனை! இந்தப் பிரச்சனை தீர வழி இல்லையா? வாழ்வு என்பது இதுதானு? சாவு ஏன் வரவேண்டும்? மனிதன் செத்தபின் பிழைப்பானே? கடவுள் இதை அறிவாரா? அறிந்தும் பின் இந்நிலையை மாற்ற முன் வராதது ஏன்? இவ்வுலகில் துன்மார்க்கர் சுக ஜீவியத்திலிருப்பது ஏன்? நீதிமான் கொடுமைப்படுத்தப்படுவது ஏன்? ஒரு குற்றமுமில்லாத நிரபராதி வஞ்சிக்கப்படுவது ஏன்? வருத்தம், பாரம், துயரம், சோகம், மரணம், நோய், ஏமாற்றம் இவைகள் உலகிலிருப்பது ஏன்? ஏன்? ஏன்? என்று கேட்கும் அனைவருக்கும், பொறுமைக்கு எடுத்துகாட்டாம் நண்பன் யோபுவை அறிமுகம் செய்து வைக்கிறேன்.

யோபு எங்கே வாழ்ந்தவன்? எப்பொழுது வாழ்ந்தான்? என்று திட்டமாக கூற இயலாவிட்டாலும் அந்த யோபுவைப்பற்றிய புத்தகம் தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை மாத்திரம் யாராலும் மறுக்க முடியாது. இந்த கதாபாத்திரத்தை பரிசுத்த வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாட்டு யோபு புத்தகத்தில் சந்திக்கலாம். மனித இதயத்தை நெகிழச் செய்யும் கதைகளில் உன்னதமான, இந்த உணர்ச்சியூட்டும் உயிரோவியத்தைப் படித்தால் நம்முடைய விசுவாசம், தைரியம், நம்பிக்கை பலப்படும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், நம்மைப்போலவே சோதிக்கப்பட்டவன், பலப்பல பிரச்சினைகளை அறிந்தவன். பொறுமையோடு பிரச்சினைகளை எதிர்த்து நின்று, முற்றும் முடிய விசுவாசத்தை காத்துக் கொண்ட வெற்றி வீரன்தான் யோபு. அவனுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கும், யுகத்துக்கும், இடத்துக்கும் உரியது அல்ல. அந்த பிரச்சனைகள் பொதுவானவைகள். ஆகவே, நண்பன் யோபு எப்படி பிரச்சனைகளை சமாளித்து வெற்றி கண்டான் என்று அவனுடைய அனுபவத்திலிருந்து நாம் அதை அறிந்து கொள்ளுவோம்.

இப்பொழுது கதைக்குச் செல்வோம்.

கதை என்றால் வெறும் கட்டுக்கதையல்ல. மனிதனுடைய சொந்த சரக்கல்ல. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள் [2 பேதுரு 1 : 20. 21]. மேலும் பவுல் கூறுகிறார், "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. [2 தீமோ. 3 : 16–17].

ஆகையால் தான் இந்த வேத புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் இந்த யோபு கதையைப் படிப்பதில் மிகுந்த அக்கறை காட்டவேண்டிய அவசியமாயிருக்கிறது. ஏனோ தானோவென்று, இங்குமங்கும் கொஞ்சம் கேட்டு' விட்டு விடாமல், இந்த உன்னதமான கதையை முழுவதும் கேட்டு, இந்தக்

கதையிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய பிரச்சனைகளிலிருந்து விடுபடும் மார்க்கத்தை அறிந்து, நீங்கள் விரும்பும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெறவேண்டும் என்பதே எங்களுடைய ஜெபமாகும். தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் தவறுமல் இந்தக் கதையை கேட்க உங்களை வேண்டுகிறோம்.

எங்கே! கதையை துவங்குவோமா?

"ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்" என்று கதை ஆரம்பமாகிறது [யோபு 1 : 1]. அவனுக்கு ஏழு குமாரர்களும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். அவனுக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருக ஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். அதனுல் அந்த மனிதன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனுயிருந்தான் [யோபு. 1 : 2–3]. மேலும் "உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவன்" என்று தேவனுல் நற்சாட்சிப் பெற்றவனுயிருந்தான் [யோபு. 1 : 8].

இப்படி உலகப் பிரகாரமான சகல சம்பத்துகளையும், தேவனுடைய தயையும் பெற்றவனுக, சௌக்கியமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

"ஒரு நாள் தேவ புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்ற பொழுது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்ருன். கர்த்தர் சாத்தானைப் பார்த்து, நீ எங்கேயிருந்து வருகிருய் என்ருர். சாத்தான் கர்த்தருக்கு பிரதியுத்தரமாக : பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்ருன். கர்த்தர் சாத்தானை நோக்கி என் தாசனுகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ, உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்ருர். அதற்கு சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக, யோபு விருதாவாகவா தேவனுக்கு பயந்து நடக்கிருன்? நீர் அவனையும், அவன் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் பெருகப் பண்ணினீர். ஆனுலும் உம்முடைய கையை நீட்டி, அவனுக்கு உண்டானவையெல்லாம் பிடுங்கிக் கொள்வீரானுல் அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கானுே பாரும் என்ருன். [யோபு. 1 : 6–11].

தேவன் யோபுவின் விசுவாசத்தின் மீதுள்ள நம்பிக்கையினுலே அந்தச் சவாலை ஏற்ருர். கர்த்தர் சாத்தானை நோக்கி "இதோ அவனுக்கு உண்டானவை எல்லாம் உன் கையிலிருக்கிறது. அவன்மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே என்ருர். தேவன் இப்படி யோபுவை சாத்தான் சோதிக்க அனுமதி தந்தார்.

சாத்தான் புறப்பட்டு போய் தன் அழிவுப் படலத்தை ஆரம்பித்தான். முதலில் யோபுவினிடமிருந்த ஒட்டகம், ஆடு மாடுகள் போன்ற எல்லா கால் நடைகளும் பறிக்கப்பட்டன. சபேயரும், கல்தேயரும் அவைகளை பிடித்துக்கொண்டு போய் விட்டனர். இரண்டாவது அடி, யோபு தன் அருமை பிள்ளைகளை இழந்தான். பெருங்காற்று அடித்து அனைவரும் மடிந்தனர். ஆனால் யோபுவோ இந்தச் சோதனையில் தோல்வி அடையவில்லை. அதற்கு மாறாக, "நிர்வாணியாய் என்தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்." [1 : 21]

சாத்தான் தன் தோல்வியை ஒப்புகொண்டானா? இல்லை. கர்த்தரிடத்தில் அனுமதி பெற்று, மூன்றாவதாக யோபுவை கொடிய பருக்களால் வாதித்தான். யோபு ஒரு ஓட்டை எடுத்து, தன்னை சுரண்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான் [2 : 7, 8]. நான்காவதாக, சாத்தான், யோபுவின் மனைவியை ஏவி விடுகிறான். "அப்பொழுது அவன் மனைவி அவனைப்பார்த்து, நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ, தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள் [2 : 9].

அடுத்த காட்சி, யோபுவைத்தேற்ற அவனது மூன்று நண்பர்களின் வருகை.

இவர்கள் யோபுவைத் தேற்றுவதாக எண்ணி, வெந்த புண்ணிலே வேலைச் செருகுவதைப் போன்று, "எல்லாம் உன் பாவத்தினால்தான் இந்த கஷ்டம் வந்திருக்கும்" என்று அந்த உத்தமனை யோபுவின்மேல் குற்றச்சாட்டை சுமத்த ஆரம்பித்தனர். இந்த கதையின் பெரும் பகுதி, யோபுவுக்கும், அவன் மூன்று நண்பர்களுக்குமிடையே நடந்த சம்பாஷணைகள் ஆகும். இப்படி எல்லோராலும் கை விடப்பட்டு எல்லாவற்றையும் இழந்தவனாக நம் யோபு இந்த அவல நிலைக்குள்ளாக்கப்பட்டும் நங்கூரமாகிய விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தான்.

தன் நண்பர்களின் கண்ணோட்டத்தில் தவறு இருந்ததை யோபு அறிந்து இருந்தான். இருப்பினும், தனக்கு ஏற்பட்ட இந்த துர்ப்பாக்கியமான நிலை ஏன் வந்தது என்று அறிந்தானில்லை. தன் சிருஷ்டிகர்த்தாவாகிய தேவனிடத்தில் பேச வாஞ்சையாயிருந்தான். ஆனால் அவரை காண இயலவில்லை. கடந்த காலங்களை நினைவு கூர்ந்தவனாய், தற்போதைய நிலைமைக்கு தன்னை நொந்து கொண்டான். "அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன். ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்" என்றான் [13 : 15].

யோபு தன் மூன்று நண்பர்களிடம் பேசினுன். ஆனால் அவர்கள் அவனுக்கு சரியான உத்தரவு கொடுக்கவில்லே.

அப்பொழுது கர்த்தர் : பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவாக, "அறிவில்லாத வார்த்தைகளினுல் ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிற இவன் யார்? இப்போதும் புருஷனைப் போல் இடைகட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன், நீ எனக்கு உத்தரவு சொல்லு" என்றார். தேவன் கேட்ட கேள்விகளுக்கு யோபு மாத்திரமல்ல, தேவன் இல்லே என்று கூறும் ஒவ்வொரு நாஸ்திகனும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இல்லாவிடில் தோல்வியை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இப்படியாக தேவன் பேசி, யோபுவின் கண்கள் திறக்கப்பட்டன.

கடைசி காட்சி :- மகிழ்ச்சி ! ஆம். யோபுவின் வாழ்வில் வெற்றி !! அவன் விசுவாசத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி!!! அவன் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டது. கர்த்தர் யோபுவின் சிறையிருப்பை மாற்றினுர். யோபுவுக்குமுன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாக அவனுக்குத் தந்தருளினுர். உண்மையிலே யோபுவின் சரித்திரம் ஓர் உணர்ச்சியூட்டும் உன்னதமான கதை. இதை நீங்கள் ஒவ்வொருவரும் படித்து பலனடையுங்கள்.

பாடம் 2

# யோபுவின் பொற்காலம்

யோபுவின் கதை மகிழ்ச்சியில் ஆரம்பமாகிறது. தேவனே அவனைப் பற்றி சாட்சி கொடுக்கும் போது, "உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார் [யோபு 1 : 8].

இப்படிப்பட்ட பாராட்டுதலைப் பெறும் அளவுக்கு அவனிடத்தில் அப்படி என்ன ஐசுவரியங்கள் இருந்தன என்பதை சற்று ஆராய்வோம்.

முதலாவது, தேவனுடைய கவனத்தை, அக்கறையை பெற்றவனுயிருந்தான். தேவன் அவனை அழைக்கும் பொழுது "என் தாசனாகிய யோபு" என்றார். ஆம்! கர்த்தர் தம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் அறிந்திருக்கிறார். பெயர் சொல்லி அழைக்கிறார். ஆகார் தன் பிள்ளையோடு வனாந்தரத்திலே இருந்தபோது, "ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது" என்று பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். தேவன் தமக்கு கீழ்படியாதவர்களையும் அறிந்திருக்கிறார். அவர் நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் கவனிக்க கூடாதபடிக்கு தம் வேலையில் மூழ்கி விடுபவரல்லர்.

இரண்டாவது, யோபு தெய்வீக ஒப்புதலை பெற்றவனாக இருந்தான். இது தான் யோபுவுக்கு கொடுக்கப்பட்டிருந்த விலையேறப்பட்ட பொக்கிஷம். கர்த்தர்தாமே யோபுவைப்பற்றிக் கூறும் பொழுது, "உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவன்" என்றார். நாமும் பூரண சற்குணராயிருக்க தேவனால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறோம் [மத்தேயு. 5 : 48]. அப்படி என்றால் எந்த பாவமும் செய்யாத அளவுக்கு ஒரு மனிதன் பூரணப்படவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை. பூரணப்படுதலை குறிக்கோளாக வைத்துக்கொண்டு ஒரு தேவனுடைய பிள்ளை தேவனைப்பற்றி அறிகிற அறிவிலும், அவர் கிருபையிலும் வளருகிறவனாக இருக்க வேண்டும்.

"எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" என்று வேதம் கூறுகிறது. கிறிஸ்தவர்களுக்கு இதை எழுதும்பொழுது, யோவான் கூறுகிறார். "நமக்கு பாவமில்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் [1 யோவான், 1 : 8, 9]. நம்மிடையில் தொடர்ந்து சீர்திருத்தம் தேவைப்படுகிறது. பின் ஏன் தேவன் யோபுவை நீதிமான் என்று பாராட்டினார் என்று பார்ப்போம்.

யோபு தன்னால் முடிந்தமட்டும் தீமையை விட்டு விலகி ஜீவித்திருக்கிறான். தேவனுடைய கற்பனைகளின்படி, அவர் வார்த்தைகளை மதித்து, கீழ்ப்படிந்து வந்திருக்கிறான் [யோபு. 23 : 12]. கபடு, சூது, மாயை இவைகளுக்கு ஒதுங்கி வாழ்ந்து வந்திருக்கிறான் [31 : 1—11]. தனக்கும் தேவனுக்குமிடையே உறவு முறியும் பொழுது, அதற்கு பரிகாரமாக பலி செலுத்துவதின் மூலம், உறவை புதுப்பித்து கொள்கிறவனாக இருந்திருக்கிறான் [1 : 5]. தன் இருதயத்தை பேராசை பொருளாசை இவற்றிற்கு விலக்கி, வஞ்சனை, வெறுப்பு, பொறாமை இவைகளால் கறைபடாதபடி காத்து வந்திருக்கிறான். அதுவுமல்லாமல் விதவைகள், திக்கற்றவர்களுக்கு உதவி செய்தும், எல்லா சோதனைகளையும் தாங்கி வந்திருக்கிறான். சொன்ன சொல் தவறாதவனாக இருந்திருக்கிறான்.

அதாவது, சுருங்கச் சொல்லப்போனால், தன் ஜீவியம் முழுவதும், தேவனுடைய சித்தத்தால் வழி நடத்தப்பட விட்டுக் கொடுத்திருக்கிறான். அதுதான் ஆவிக்குரிய வளர்ச்சி. அதனால் தான் தேவன் அவனை பாராட்டி இருக்கிறார். ஆதலால் நாமும் அவ்வித முதிர்ச்சியடைய குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிடவேண்டும் [1 கொரி. 13 : 11]. ஆவிக்குரிய விஷயத்தில் வளராத, முதிர்ச்சியடையாதவன் சோதனைகளை தாங்கமாட்டான். சோதனை காலத்தில் பின் வாங்கிப்போவான். மனிதன் விழுந்து போவது சகஜம், ஆனால் விழுந்து போன நிலையிலே இருத்தல் பேதமை. தவறிலிருந்து விடுபட்டு, எழுந்து, திருந்தி வாழ்பவனே பலவான்.

மூன்றாவதாக, யோபின் ஐசுவரியம் அவனுடைய நல்லதொரு குடும்பம். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். யோபுக்கு ஏழு குமாரர்களும், மூன்று குமாரத்திகளும் இருந்தனர். தன் பிள்ளைகளை தேவனுடைய மார்க்கத்தில், தேவ பயத்தில் நடத்தி வந்திருக்கிறான். விருந்து செய்கிறபோது யோபு ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து தேவனை தங்கள் இருதயத்தில் தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்துவான் [1 : 5]. இப்படிப்பட்ட தகப்பனைப்பெற்ற பிள்ளைகள் எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணிப்பாருங்கள். ஆம்! பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்க வேண்டும் என்றும் தேவன் பெற்றோர்களுக்கு சொல்லுகிறார் [எபே. 6 : 4].

இப்படிப்பட்ட பெற்றோர்கள் இவ்வுலகில் இன்று இருந்தால், நம் சமூகம் ஏன் இந்த அளவிற்கு சீர்குலைந்து காணப்படுகிறது?

நான்காவது, யோபு உலக ஐசுவரியத்தால் நிறைந்தவனாகவும் காணப்பட்டான். அவனுக்கு 7000 ஆடுகளும், 3000 ஒட்டகங்களும், 500 கழுதைகளுமாகிய மிருக ஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். அதனால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான் [1 : 3].

பொதுவாக பக்தியும், உலக ஐசுவரியமும் ஒருவனுக்கு சேர்ந்து இருக்காது. இவ்வுலகத்தில் பெரும்பாலும் ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்கிறவர்களாகவும் இருப்பார்கள். ஏழ்மையும், வறுமையும் எப்படி ஒரு மனிதனை சோதிக்கக் கூடுமோ அப்படியேதான் ஐசுவரியமும் கூட ஒருவனுக்கு மிகப் பெரிய சோதனையாகும். தரித்திரனாக இருப்பது மாத்திரம் தேவனுடைய பார்வையில் ஒரு ஆசீர்வாதமாகாது அல்லது ஐசுவரியவானாக இருப்பதினால் ஒருவன் சபிக்கப்பட்டவன் என்று கூறிவிட முடியாது. தரித்திரனோ, ஐசுவரியவானோ தேவனுடைய சித்தத்தின்படி நடந்தால்தான் அவன் ஆசீர்வதிக்கப்படுவான். ஆகவே நம்முடைய ஜெபமும், ஞானி சாலமோனைப்போல, "தரித்திரத்தையும், ஐசுவரியத்தையும் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காத படிக்கும் என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்," என்று கூறுவது நல்லது [நீதி. 30 : 9].

மேலும், பவுல் அப்போஸ்தலனைப் போன்று "வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும், எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் [பிலி. 4 : 11]. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

ஐந்தாவது, யோபுக்கு இருந்த ஐசுவரியம் சரீர ஆரோக்கியமுமாகும். வியாதி வரும் வரை, ஆரோக்கியத்தின் அருமை நமக்கு தெரிவதில்லை. யோவான் தன் பிரிய நண்பனான காயுவுக்கு எழுதுகிறபோது, "நீ உன் ஆத்துமா வாழ்கிறது போல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்" என்றார்.

ஆறாவது, அனேக நல்ல நண்பர்களை உடையவனாக யோபு இருந்தான். நமக்கு வாழ்க்கையில் சோர்வு ஏற்படும் போதும், துன்பத்தால் அலைக்கழிக்கப்படும் போதும் மற்ற நண்பர்கள் ஆலோசனை, உதவி தேவைப்படுகிறது. தீய நண்பர்கள் செல்வாக்கினால் பாதிக்கப்பட்டால், நாமும் கெட்டவழியில் செல்ல ஏதுவாகும். ஆனால் நல்ல நண்பர்களை உடையவர்களாக இருந்தால் அது எவ்வளவு பெரிய ஆறுதலும், ஆசீர்வாதமாகவும் இருக்கும்.

ஏழாவது, மற்ற மனிதர்களின் நன்மதிப்பை பெற்றவனாக யோபு இருந்தான். இப்படி மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டும் என்று மனிதன் எண்ணுவது இயற்கை. அதற்காக அதை அடைய குறுக்கு வழியில் செல்லாமல், நல்ல குணதிசயத்தாலும், பயனுள்ள ஜீவியத்தாலும், சுயநலமில்லாத பண்பினாலும் மற்றவர்களால் கவரப்படுவதும் ஒரு ஆசீர்வாதமே.

மற்றவர்கள் பாராட்டை பெறுவதையே குறிக்கோளாக வைத்து தேவனுக்கு முதலிடம் கொடுத்து ஜீவிக்காமல் மனிதர்களை பிரியப்படுத்துகிறவர்களானால் நமக்கு என்ன லாபம்? தேவனுடைய வழியை பின்பற்றுவதானால், அது இடுக்கமான வழியில் செல்வதாகும். மிகச் சிலரே அவ்வழி செல்ல விரும்புவர். அனேகர் செல்லும் விசாலமான வழியைப் போன்ற கவர்ச்சியுள்ளதல்ல இவ்வழி. மற்றவர்களால் இகழ்ந்துரைக்கப்பட்டாலும், தூற்றப்பட்டாலும், அவமானப்படுத்தப்பட்டாலும் கிறிஸ்துவே மெய்யான ஒரே வழி என்று அவரை பின்பற்றி நடப்பதே சத்திய வழியாகும். அது ஜீவனுக்குப் போகிற வழி. இம்மையிலும் பரிபூரண ஜீவனைப் பெறலாம். மறுமையிலும் நித்திய நாளுக்கான நம்பிக்கை உண்டு.

இப்படியாக யோபு, சகல ஆஸ்தி, ஐசுவரியங்களையும் உடையவனாக தேவனிடத்திலிருந்து பாராட்டுதலை பெற்றவனாக சம்பூர்ணமாய் வாழ்ந்து வந்தான். நாம் யோபுவைப் போலவே ஆஸ்திகளையுடைவர்களாக இல்லாவிட்டாலும் தேவனுடைய பாராட்டுதலைப் பெற்று, தேவனுக்கு முன்பாக நீதியுள்ள ஜீவியத்தை மேற்கொள்ளும்போது, தேவ சமாதானத்தை பெறுவதோடல்லாமல், பரலோகத்திற்கு பாத்திரர்களாகவும் இருக்க முடியும். இனி இப்படிப்பட்ட யோபு எப்படி சாத்தானால் சோதிக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டான். அவன் பின்னிலைமை எவ்வாறு இருந்தது என்பதை அடுத்த பாடத்தில் படிப்போம்.

பாடம் 3

# சாத்தானின் சோதனை

முந்தின பாடத்தில் யோபின் முன்னிருந்த நிலையைப் பார்த்தோம். இந்தப்பாடத்தில் அப்படிப்பட்ட யோபுவை, துயரத்திற்குள்ளாக்கிய சாத்தானைப் பற்றி கவனிப்போம்.

சாத்தான் தேவனிடத்திலிருந்து அனுமதிபெற்று யோபுவை கடுமையாக சோதித்தான். அந்த சோதனைக்காரனான பிசாசானவன் இன்றும் நம்மை சோதித்துக் கொண்டிருக்கிறான். நம்முடைய வாழ்க்கையோடு விளையாடும் இவனைப்பற்றி நாம் தெரிந்து வைத்திருப்பது, அப்படிப்பட்டவனை எதிர்த்து நிற்க நமக்கு உதவியாயிருக்கும்.

எந்த வேதாகமம் தேவனைப்பற்றி பேசுகிறதோ, அதே வேதாகமம் சாத்தானைப்பற்றி கூறுகிறது. ஆகவே சாத்தான் இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. மனுக்குலத்தின் விரோதியான இவன் பல பெயர்களால் அழைக்கப்படுகிறான்.

மத்தேயு. 4 : 1 - ல் பிசாசு என்றும்,

வெளி. 20 : 2 - ல் சாத்தான், பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் என்றும்.

மத்தேயு. 12 : 24 - ல் பெயெல் செபூல், பிசாசுகளின் தலைவன் என்றும்.

யோவான். 14 : 30 - ல் உலகத்தின் அதிபதி.
எபே. 2 : 2 - ல் ஆகாயத்து அதிகாரப்பிரபு.
II கொரி. 4 : 3, 4 - ல் இப்பிரபஞ்சத்தின் தேவன்.
மத். 4 : 3 - ல் சோதனைக்காரன் என்றும் வர்ணிக்கப்படுகிறான்.

இந்தப்பெயர்கள் ஓரளவு அவனுடைய தன்மைகளை விளக்குகிறது. பவுல் கூறுகிறார். "நாம் சாத்தானாலே மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்" [II கொரி. 2 : 11].

இப்பொழுது பிசாசானவனுடைய சில குணாதிசயங்களை ஆராய்வோம் :-

1. பிசாசானவன், மனுஷர் சத்தியத்திற்குக் கீழ்படிய முட்டுகட்டையாயிருக்கிறான்.

விதைக்கிறவனின் உவமையின் கருத்தை இயேசு கூறும்பொழுது "வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தை கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு பிசாசானவன் வந்து அவ் வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான் [லூக்.8 : 12].

இன்று எத்தனையோ பேர், தேவனுடைய வசனத்தை கேட்கின்றனர், படிக்கின்றனர், ஆனால் அவைகளுக்குக் கீழ்படிய முன்வருவதில்லை.

2. பிசாசானவன் உலகத்திலேயே மிகப்பெரிய ஏமாற்றுக்காரன் :—

ஆதியிலே ஏதேன் தோட்டத்தில் ஏவாளை வஞ்சித்து, தேவனால் புசிக்கக்கூடாது என்று கட்டளையிடப்பட்ட கனியை புசிக்க வைத்தான். இன்றும் எல்லோரையும் வஞ்சித்து, மோசம் போக்கிக்கொண்டிருக்கிறான். கண நேர இன்பத்திற்கு தங்கள் கற்பை பறிகொடுத்து விட்டு அவமானப்படு குழியில் விழுந்து தவிக்கும் ஆயிரமாயிரம் இளம் பெண்கள், கேவலம் கொஞ்சம் பணத்திற்காக தன் உடன் பிறப்பையே கொன்றுவிட்டு கம்பி எண்ணுவோர், மேட்டிமையின் காரணமாக வழக்கு மன்றத்திற்கு சென்று,இருக்கும் பணத்தை எல்லாம் செலவழித்துவிட்டு, பராரியாக நிற்போர். இவர்களெல்லாம் சாத்தானுடைய வஞ்சனையின் எடுத்துக்காட்டு.

அவன் என்ன சொல்லுவான், "கர்த்தருக்கு இவ்வளவு சீக்கிரம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை, நிறைய அவகாசம் உண்டு, நாம் எதை விசுவாசித்தாலும், எதை செயலாற்றினாலும், எப்படி ஆராதனை செய்தாலும், எந்த மதத்தை பின்பற்றினாலும் பரவாயில்லை. எந்த சபையில் இருந்தாலும் பரவாயில்லை. பெரும் பான்மையினர் என்ன செய்கிறார்களோ அதையே நாம் பின்பற்ற வேண்டும்" என்று சொல்லுவான். பவுல் இவனைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார், " அப்படிப் பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள். கபடமுள்ள வேலையாட்கள். கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துகொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்" [2 கொரி. 11 : 13–15].

சாத்தான் குழப்பத்தை உண்டாக்குகிறான். உலகில் இன்று நூற்றுக் கணக்கான பல்வேறு நாமகரண கூட்ட சபைகளாக கிறிஸ்தவ மார்க்கம் பிரிந்து இருக்கிறது. இந்த குழப்பத்திற்கு வேதாகமமே காரணம் என்பர் சிலர். இது உண்மையா? வேதாகமம் தேவனுடைய வார்த்தை. ஆகவே பவுல் கூறுகிறார், "தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார் [1 கொரி. 14 : 33]. எங்கேயெல்லாம் குழப்பம் பிரிவினை இருக்கிறதோ, அங்கே யெல்லாம் நம்முடைய சாத்தான் வேலையை துவங்கிவிட்டான் என்று பொருள்.

3. சாத்தான் ஒரு கொலைபாதகனும், பொய்யனும் கூட :—

இயேசு கூறினார், "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள். அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன்

சத்தியத்திலே நிலை நிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்" [யோவான். 8 : 44]. சாத்தான் கூறிய முதல்பொய், ஆதியாகமம் 3 - ம் அதிகாரத்தில் 4 - ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஏவாளைப் பார்த்து, விலக்கப் பட்ட கனியை புசித்தால், "சாகவே சாவதில்லை" என்று சொன்னான்.

காயீன் தன் சகோதரன் ஆபேலை கொன்ற பிறகு, இரண்டாவது பொய்யை கூறினான் [ஆதி. 4 : 9]. தன் உடன் பிறப்பாகிய ஆபேலை கொன்றுவிட்டு, "நான் அறியேன்" என்று கர்த்தரிடத்தில் பொய் சொன்னான். அதிலிருந்து மனுக்குலம், ஏன் கிறிஸ்தவர்களும் கூட, பொய்யை கூறிக்கொண்டு வருகின்றனர். பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" [வெளி. 21 : 8].

4. சாத்தான் உங்களுடைய எதிராளி :—

நீங்கள் அவனைப்பற்றி நினைக்கிறீர்களோ என்னவோ, அவன் உங்களைப் பற்றி நிச்சயமாக நினைத்துக்கொண்டிருக்கிறான். நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களோ இல்லையோ? உங்களோடு போராடுகிறான். அவனே உங்கள் முதல் தரமான விரோதி. உங்கள் வீழ்ச்சியில் அவனுக்கு அதிக பிரியம். தேவன் அவனைப் பார்த்து, "நீ எங்கேயிருந்து வருகிறாய் என்று வினவியபோது, பூமியெங்கும் உலாவி அதில் சுற்றித் திரிந்து வருகிறேன் என்றான்" [யோபு 1 : 7]. அப்படியானால் குட்டிபோட்ட பூனை மாதிரி ஓய்வில்லாமல் நம்மத்தியில் சுற்றி வருவதே அவனுக்கு வேலை.

மேலும், "என் தாசனாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ என்று தேவன் கேட்டதற்கு உடனே பதில் கூறியதிலிருந்து, பேர்பேராக தனித்தனியாக நம் ஒவ்வொருவரையும் அறிந்திருக்கிறான் என்பதற்கு வேறு என்ன சாட்சி வேண்டும்? பேதுரு அவனைப்பற்றி கூறும்பொழுது, உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமென்று வகை தேடிச்சுற்றி திரிகிறான்" என்றார் [1 பேதுரு. 5 : 8].

அவன் அதிகமாக வேலை செய்வது நீதிமான்கள் மத்தியில்தான். ஏனெனில் தீமை செய்கிறவர்கள், துன்மார்க்கர் ஏற்கனவே அவனுடைய ஆட்களாக இருக்கின்றனர். அவர்களைப் பற்றி கவலை இல்லை. ஒருவன் எந்த அளவு தேவனுக்கு ஒப்புக்கொடுத்து இருக்கிறானோ அந்த அளவுக்கு அவனை தன் வசப்படுத்த எல்லா பிரயத்தனத்தையும் சாத்தான் எடுப்பான். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே சோதித்தான் என்றால், அவரை பின்பற்றுகிறவர்களை சும்மா விடுவானா? எப்பொழுதெல்லாம் தவறை விட்டு, பாவத்தை விட்டு கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கலாம் என்று முடிவான ஒரு தீர்மானத்திற்கு வருகிறோமோ, அப்பொழுதே அந்த காரியத்தை

செயலாற்றுதபடிக்கு எல்லா முட்டுகட்டைகளையும் போடுவான். நாம் மாம்சத்தில் ஜீவிக்கும் காலம் எல்லாம் அவனோடு நமக்கு என்றும் மல்யுத்தம் தான்.

**5. சாத்தான் பழி சுமத்துகிறவன் :—**

நல்லவனை குற்றம் சுமத்தி பழி சுமத்துவது இருக்கிறதே, அது பிசாசினிடத்திலிருந்து ஆரம்பமானது. தேவன் சாத்தானை பார்த்து, "என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ" என்று கூறியபொழுது, சாத்தான் பிரதியுத்தரமாக, "யோபு விருதாவாகவா தேவனுக்கு பயந்து நடக்கிறான், அவனுக்கு உண்டானவைகளையெல்லாம் நீர் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கானோ பாரும்" என்றான் [1 : 9—11]. அப்படி கூறும் பொழுது, உத்தமனான யோபு வெறும் கூலிக்கு மாரடிக்கிறான் என்ற குற்றச் சாட்டை போடுகிறான்.

இப்படிப்பட்ட பயங்கரமான சாத்தானோடு நமக்கு அன்றாட போராட்டம் உண்டு. அவன் நம்மை எல்லா கட்டத்திலும் சோதிக்கிறான். அவன் சோதனைக்கு பலியானோர் ஏராளம். இவனை எதிர்ப்பது எப்படி? யாரிடமிருந்து சக்தியைப் பெறுவது என்று கேட்கிறீர்களா?

பாடம் 4

# சாத்தானை மேற்கொள்வது எப்படி ?

**சா**த்தானுடைய குணதிசயங்களைப் பற்றி படித்தோம். அதைத் தொடர்ந்து இப்பேர்ப்பட்ட தந்திரசாலி, ஏமாற்றுவித்தைக்காரனை எப்படி நாம் ஜெயங்கொள்வது என்று பார்க்கலாம்.

பிசாசானவன் தேவனுடைய பிள்ளையை சோதிக்கிறான். என்றாலும் மனிதன் செய்கிற பாவத்திற்கு தேவன் மனிதனை பொறுப்பாளியாக்குகிறாரே தவிர சாத்தானை அல்ல. பெரும்பாலும் மனிதர்கள் என்ன கூறுகின்றனர் என்றால், "தேவன் என்னை மிகவும் சோதிக்கிறார்". தீமை செய்யும்படி தேவன் ஒருபோதும் நம்மை சோதிக்க மாட்டார்.

"சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல. ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும் [யாக். 1 : 13–15].

சிலர், அப்படிப்பட்ட சாத்தானை ஏன் தேவன் மனிதனை சோதிக்க அனுமதிக்க வேண்டும்? சாத்தான் தேவனைக்காட்டிலும் பலசாலியா? என்று கேட்கின்றனர். மனிதன் சிருஷ்டிக்கப்பட்டபோது, தேவனுடைய சாயலிலே சிருஷ்டிக்கப்பட்டான். எதையும் சுயமாக தேர்ந்தெடுத்து செயலாற்றும் சுதந்தரத்தை தேவன் மனிதனுக்கு கொடுத்திருக்கிறார். மனிதன் வேண்டுமானால் தேவனுக்கு கீழ்படியலாம் அல்லது சாத்தானுக்கு கீழ்படியலாம். தேவன் கட்டாயப்படுத்துவதில்லை. ஆகவே, "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்படிதலுக்கானாலும் எதற்கு கீழ்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்படிகிற அடிமைகளா யிருக்கிறீர்களென்று அறியீர்களா? [ரோமர் 6 : 16].

சாத்தான் ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட முதல் ஸ்திரீயாகிய ஏவாளை சோதித்து, தனக்கு கீழ்படியும்படியாகவும், தேவனுக்கு கீழ்படியாமல் போகவும் செய்தான். அந்த ஸ்திரீயானவள், அவள் செய்த பாவத்தின் பிரதிபலனை அனுபவித்தாள். அந்தப்படியே சாத்தான் நம்முடைய யோபுவையும் சோதித்தான். ஆனால் யோபு தன் விசுவாசத்தை விட்டு விலகவில்லை. சாத்தான் தோற்றுப்போனான். "இவை எல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை,

தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை [யோபு 1 : 22]. சாத்தான் இயேசு கிறிஸ்துவையும் சோதித்தான் [லூக். 4 : 1–13]. "அவர் நம்மைப்போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டார் [எபி. 4 : 15]. ஆனால் இயேசு தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தினாலே சாத்தானை மடங்கடித்தார் [எபே. 6 : 17]. சாத்தான் யூதாசையும் சோதித்தான் [யோவா. 13 : 2]. அவனோ தன் ரட்சகரையே 30 வெள்ளிக்காசுக்காக விற்றுப்போட்டான். இவர்களை எப்படி சாத்தான் சோதித்தானோ அப்படியே தேவனுடைய பிள்ளைகளையும் இன்று சோதிக்கிறான் [யாக். 1 : 2–3]. ஆனால் "சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தை பெறுவான் [யாக். 1 : 12].

கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமையுமாகிய இந்த மூன்று உபகரணத்தால் சோதிக்க முற்படுவான் [1 யோவான். 2 : 16]. யோபுவைப்போல, இயேசுவைப்போல சோதனைகளுக்கு நம்மை ஒப்புக்கொடாமல் அதை சகித்தால், இவை எல்லாம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தேவன் தம் பிள்ளைகள் திராணிக்கு மீறி சோதிக்கப்பட விடமாட்டார். அப்படி சோதிக்கப்பட்டாலும், சோதனையை தாங்கத்தக்கதாக சோதனையோடுகூட அதற்குத் தப்பிகொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் [1 கொரி. 10 : 13]. சாத்தானின் வல்லமையை அழிக்கவே கிறிஸ்து வந்தார் [எபி. 2 : 14–15; ரோமர். 16 : 20].

பிசாசானவன் கட்டப்பட்டிருக்கிறான். அவன் வல்லமை வரையறுக்கப்பட்டிருக்கிறது. "ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும், பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிறங்கிவரக் கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து அந்த 1000 வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதை பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான் [வெளி. 20 : 1–3].

இயேசு "பலவானை முந்திக்கட்டினாலொழிய ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து அவன் உடைமைகளை கொள்ளையிடக்கூடாது. கட்டினானேயாகில் அவன் வீட்டைக்கொள்ளையிடுவான்" என்றார் [மாற்கு. 3 : 27]. இதிலிருந்து சாத்தான் கட்டப்பட்டிருக்கிறான் என்பதை எவ்வாறு மறுக்கமுடியும். பைத்தியம்பிடித்த நாயை கட்டிப்போட்டு விட்டதால், அது ஒன்றும் செய்யாது என்று அர்த்தமல்ல.

கிறிஸ்துவும், மனிதன் வெற்றிகரமாக சாத்தானை எதிர்க்கும்படி செய்தார். "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" என்று யாக்கோபு கூறுகிறார்.

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான் [1 பேதுரு. 5 : 8]. சிலர், பேதுரு கூறியதிலிருந்து சாத்தான் இன்னும் கட்டப்படவில்லை என்பர். அடுத்த வசனத்தைப் படியுங்கள். இங்கு பேதுரு எவ்வாறு சாத்தானை எதிர்த்து நிற்பது என்பதை சொல்லுகிறார். "விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே." விசுவாசத்தில் இருப்பவர்கள் சாத்தானை எதிர்த்து நிற்க முடியும். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" என்றார் பவுல் [எபே. 6 : 11].

மேலும் "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய். எல்லாவற்றுக்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். " என்றார் [எபே. 6 : 16]. ஆகவே, தங்கள் ஆத்தும ரட்சிப்புக்கு உண்மையிலே அவனை எதிர்த்து நிற்கும் எல்லோராலும் சாத்தான் கட்டப்பட்டிருக்கிறான். அவனை கட்டும் சங்கிலியாக இருப்பது கிறிஸ்துவின் சுவிசேஷம். புறஜாதிகளுக்கு மத்தியில், தான் ஊழியம் செய்வதற்காக தெரிந்துக்கொள்ளப்பட்டபோது, கிறிஸ்து கூறியதாக பவுல் குறிப்பிட்டது, "அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களை திறக்கும்பொருட்டு இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்" [அப். 26 : 18]. பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால் இவை எல்லாவற்றையும் அவர்களுக்கு சாத்தியமாக்கினார்.

முடிவாக பிசாசானவன், "மிருகமும். கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" [வெளி. 20 : 10]. சரியான இடம் தான் இந்த பிசாசானவனுக்கு. எல்லோரையும் மோசடி செய்த ஏமாற்றுக்காரனுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்கிறீர்களா? பொறுங்கள். இதைக்காட்டிலும் மிகவும் பயங்கரமான தண்டனை காத்திருப்பதை நாம் ஒவ்வொருவரும் அறியவேண்டும், மறந்து விடக்கூடாது. அதாவது சாத்தானால் வஞ்சிக்கப்பட்டவர்கள் அனைவரும், அவனுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் அனைவரும், சத்தியத்தை அறியாதவர்களும், அதற்குக் கீழ்ப்படியாதவர்களும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமல் இருக்கும் ஒவ்வொருவரும், இவ்வுலகில் உள்ள எல்லா கொடியவர்களும், பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே பங்கடைவார்கள் [மத். 25 : 41]. "இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" என்றார் [மத். 25 : 46].

பாடம் 5

# யோபுவின் வேதனை

**சா**த்தான் நம்முடைய விரோதி என்பதையும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கொண்டு, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினுல் சாத்தானை ஜெயங்கொள்ள முடியும் என்பதையும் கடந்த பாடத்திலிருந்து தெரிந்துகொண்டோம். துன்பப்புயலினுல் எப்படி எல்லாம் அலைக்கழிக்கப்பட்டான் என்பதையும் தெரிந்துகொள்ளுவோம். இப்படிப்பட்ட அவல நிலையிலும் யோபு எப்படி தன் விசுவாசத்தை காத்துக்கொண்டான் என்பதிலிருந்து அப்படிப்பட்ட துன்பங்கள் நமக்கு வரும்போது, யோபுவின் அனுபவங்கள் எந்த அளவுக்கு நமக்கு உதவியாயிருக்கும் என்பதையும் தெளிவாகக் காண்போம்.

துன்பங்கள் வரும்போது முன்னெச்சரிக்கை செய்துவிட்டா வருகின்றன? இல்லை, சடிதியில் திடீரென்று வருகிறது. நாம் எதிர்பாராத வேளையில் நம்மை சந்தித்து துயரக் கடலில் தள்ளி விடுகிறது. வியாதி, குடும்பப்பிரச்சனை, சபையில் குழப்பங்கள், நாட்டில் அமைதியின்மை போன்ற அநேக கஷ்டங்கள் இப்படித்தான் வருகின்றன. யோபுவினுடைய வாழ்க்கையின் முன்னிருந்த நிலையைக் கண்டோம். சீரும் செல்வாக்காக வாழ்ந்து கொண்டிருந்த யோபுவின் வாழ்க்கையில் திடீரென்று புயல் வீசிற்று. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற பழமொழிக்கொப்ப, அடுக்கடுக்காக பல துன்பங்கள் வந்தன.

சாத்தானுடைய முதலாவது அடி, யோபுவினுடைய எல்லா சொத்துக்களையும் பறித்துக்கொண்டான். அவனிடத்திலிருந்த கால் நடை செல்வங்களான, ஆடு, மாடுகள், கழுதை, ஒட்டகங்கள் அனைத்தும் பறிபோயின. சபேயரும் கல்தேயரும் அவைகளை சாய்த்துக்கொண்டு போய்விட்டனர். வானத்திலிருந்து அக்கினி வந்து ஆடுகளையும், வேலையாட்களையும் சுட்டெரித்துப்போட்டது [யோபு. 1 : 14—17].

ஆஸ்திகள் இன்று இருக்கும் நம் கையில், நாளை நம்மை விட்டு போய் விடும். நம்முடைய அறிவீனத்தினுலோ முன்ஜாக்கிரதை இல்லாத காரணத்தினுலோ, நம்முடைய ஆஸ்திகள் சம்பாத்தியங்கள் அழிக்கப்படலாம். இன்னும் மற்ற கொடுமைக்காரர்களின் நிமித்தம் நாமும் வஞ்சிக்கப்படலாம், ஏமாற்றப்படலாம். எது எப்படியாயினும் ஐசுவரியம் நிலையானதல்ல என்பதை நாம் அறிய வேண்டும். ஆகவே தான் இயேசு கிறிஸ்து, "உங்கள் பொக்கிஷங்களை பூமியிலே சேர்த்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சிகளும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டு திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். உங்கள்

பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் [மத். 6 : 19–21].

அப்படி என்றால், அவற்றை தேவனுடைய மகிமைக்கென்று அவர் ஊழியத்திலே செலவு செய்தோமானால், அப்பொழுது பரலோகத்திலே நம்முடைய பொக்கிஷங்கள் இருக்கும். அதற்கு பிறரை ஏமாற்றி, வஞ்சித்து, ஏழைகளின் ரத்தத்தை பிழிந்து, ஊரை மோசம் செய்து பொருள் சம்பாதிக்க வேண்டாம். தேவனுக்குச் சித்தமானால் நலமாக தன் கைகளினாலே வேலை செய்து, நேர்மையாக பாடுபட்டு சம்பாதித்து, ஞானத்தோடு அதைசேமித்துவைத்து, தனக்கும் பிறர்க்கும் உதவ செலவிடலாம். ஐசுவரியமில்லாத ஏழை என்று நாம் நினைத்துக்கொண்டால், பவுல் சொன்னது நமக்கு ஒரு நல்ல பாடம்.

தேவன், அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் என்ன கூறுகிறார் என்பதை கவனியுங்கள். "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக்கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும், சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பணத்தாசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" [1 தீமோ. 6 : 6–10].

ஆகவேதான் இயேசு கிறிஸ்துவும், "இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப்பகைத்து மற்றவனை சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" என்றார் [மத். 6 : 24]. மீண்டும் ஆண்டவர் உரைப்பதாவது, "ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை எல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" [மத். 6 : 31–33].

சங்கீதக்காரன் தாவீது கூறுகிறார். "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும்

குறைவுபடாது" [சங். 34 : 10]. அப்படி என்றால், நாம் பேசாமல் வீட்டில் உட்கார்ந்து விட்டால் நமக்கு எல்லாம் கிடைத்துவிடும் என்று அர்த்தமா? இன்னும் வேதம் என்ன கூறுகிறது என்று கேளுங்கள். "திருடுகிறவன் இனித்திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக் கடவன்" [எபே. 4 : 28]. யோபு தன் ஆஸ்திகளையெல்லாம் இழந்துவிட்ட பின்னரும், நம்பிக்கையை இழக்கவில்லை. தொடர்ந்து கர்த்தரை விசுவாசித்தான்.

இரண்டாவது அடி, யோபுவின் பிள்ளைகளை சாத்தான் பறித்துக்கொண்டான். ஆம்! யோபுவின் குமாரர்களும், குமாரத்திகளும் ஒரே நாளில் பெருங்காற்று அடிக்க விழுந்து இறந்து போனார்கள். யோபுவுக்கு எப்படி இருந்திருக்கும். சற்று எண்ணிப் பாருங்கள். குழந்தைகளை எவ்வளவு அன்போடு பெற்றோர்கள் நேசிக்கின்றனர். "இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" [சங். 127 : 4]. குழந்தைகளைப் பற்றி வேதம் கூறுவதை நாம் அறிந்து கொண்டால் இப்படிப்பட்ட நிலைமை நமக்கு ஏற்படும்போது நாம் அதைத் தாங்க உதவியாயிருக்கும்.

சிறு பிள்ளைகள் வளர்ந்து, நன்மை தீமையறியத்தக்க அறிவை உபயோகிக்கும் பருவம் வந்து, தேவனுடைய கட்டளையை மீறி பாவம் செய்யும் பிராயம்வரை, களங்கமில்லாதவர்களாக இருக்கிறார்கள். சிறுபிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்திற்கு சொந்தமானவர்கள் [மத். 18 : 3; 19 : 14].

அவர்களிடத்தில் சொந்தப் பாவமும் இல்லை, ஜென்மப் பாவமுமில்லை. "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை" என்று வேதம் கூறுகிறது [எசே. 18 : 20]. பாவம் என்பது, "தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே." [1 யோவா 3 : 4]. ஆகவே அவர்கள் பொறுப்பேற்கும் பருவம் வந்து, தேவனுடைய பிரமாணத்தை அறிந்து, அதை மீறும் வரை, பாவம் செய்தவர்களாக எண்ணப்படுவதில்லை. அப்படிப்பட்ட குழந்தைகள் இறந்துபோனால், அவர்களுடைய ஆத்துமா பரலோகத்திற்கு செல்லும். சரீர பிரகாரமான இழப்பு வருத்தத்தை கொடுத்தாலும் ஆவிக்குரிய நிலையில் நாம் சந்தோஷப்பட வேண்டும். மற்றபடி, நம்முடைய வயதுக்கு வந்தவர்கள் நம்மை விட்டுப் பிரிக்கப்பட்டால் என்ன செய்வோம்?. எபி. 9 : 27—ல் "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், நியாயத் தீர்ப்படைவதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று படிக்கிறோம். மரணம் சம்பவிக்குமுன் நாம் அவர்களுக்கு ஏதேனும் செய்யக்கூடுமே தவிர, ஒரு தடவை மரித்துவிட்டால் அவர்களுக்காக நாம் ஒன்றும் செய்ய இயலாது.

அப்படி மரிக்கிறவர்கள், கிறிஸ்துவுக்குள் மரித்தால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிரோடு எழுந்திருப்பார்கள். பின்பு நியாயத்

தீர்ப்படைந்து, கர்த்தருடனே கூட என்றும் இருக்கும் சிலாக்கியத்தை பெறுவர். தேவனை அறியாதவர்களாக, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படியாதவர்களாக மரித்தால் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். ஒருதரம் இறந்து விட்டால், மனந்திரும்பி, குணப்படும் கடைசி வாய்ப்பும் போய்விடுகிறது. செத்தவர்களுக்கு நாம் என்ன செய்தாலும், அவர்கள் பிழைக்க முடியாது. உயிரோடு இருக்கும்போது அவர்களைத் தேற்றி, தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிய, நாம் உதவி செய்யலாம்.

தேவனுடைய இயற்கை நியதிக்குட்பட்டு, ஒரு விதையானது முளைத்து சிறு செடியாகி, பிறகு மரமாகி, கனி கொடுத்தபின், பழுத்து வலுவிழந்து ஒரு நாள் மரம் விழுந்து பட்டுப்போகும். அப்படியே மனிதனும் ஒரு நாள் மடிய வேண்டியவனாக இருக்கிறான். ஆகவே நம்மை விட்டு நம்முடைய அன்புக்கு பாத்திரமானவர்கள் பிரிக்கப்படும்போது, அதைக்குறித்தே கவலைப்பட்டுக் கொண்டு நம்முடைய கடமையை விட்டுவிடக்கூடாது. தன் பிள்ளைகள் அனைவரையும் இழந்த யோபுவுக்கு இருந்த மனோ நிலை நமக்கும் வேண்டும். யோபுவோடு சேர்ந்து நாமும் "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று சொல்வோம் [யோபு. 1 : 21].

---

பாடம் 6

# கஷ்டங்களைப்பற்றிய நம்முடைய மனோநோக்கு

இப்பொழுது தொடர்ச்சியாக, யோபுவுக்கு சாத்தானால் ஏற்பட்ட துன்பங்களை கவனிப்போம். பெரும்பாலும் நமக்கு வரும் துன்பங்கள் நம்மை கொல்லுவது கிடையாது. அத்துன்பங்களைக் குறித்த நம்முடைய மனோநிலையானது நம்மை அழிக்க வல்லதாக இருக்கிறது. அடுத்தபடியாக சாத்தான், யோபுவின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் வாதித்தான் [யோபு. 2 : 7]. யோபுவை வாட்டிய அந்த நோய் என்னவென்று நாம் அறியவேண்டும் என்றால், அந்த பயங்கர நிலையைப்பற்றி யோபுவே கூறும் சில வசனங்களை படித்தாலே போதும்.

"என் மாம்சம் பூச்சிகளினாலும், அடைபற்றின புழுதியினாலும் மூடப்பட்டிருக்கிறது, என் தோல் வெடித்து அருவருப்பாயிற்று [7 : 5]. "என் எலும்புகள் என் தோலோடும் என் மாம்சத்தோடும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. என் பற்களைமூடக் கொஞ்சம் தோல் மாத்திரம் தப்பினது" [19 : 20]. "என் தோல் என்மேல் கறுத்துப்போயிற்று. என் எலும்புகள் உஷ்ணத்தினால் காய்ந்து போயிற்று" [30 : 30]. செத்தால் கூட பரவாயில்லையே ஆண்டவனே! என்னை எடுத்துக்கொள் என்று கதறி அழும் வியாதியஸ்தரை, மரணப்படுக்கையில் சந்தித்திருக்கிறீர்களா? அப்படி என்றால் நம் யோபு எப்படிப்பட்ட நிலையில் இருந்திருப்பான் என்று ஒருவாறு உங்களால் யூகிக்க முடியும்.

தேக ஆரோக்கியத்துடன் இருப்பது ஒரு ஆசீர்வாதம்தான். அப்போஸ்தலனாகிய யோவான் காயுவுக்காக வேண்டிக்கொள்ளுகிறபோது "உன் ஆத்துமா வாழ்கிறது போல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் " என்றார் [3 யோவான். 2]. இயேசு இப் பூமியில் இருந்தபோது தம்மிடத்தில் வந்த எல்லா வியாதியஸ்தரையும் குணமாக்கினார். குருடனுக்கு பார்வை கொடுத்தார். குஷ்டரோகியை சொஸ்தமாக்கினார். திமிர்வாதக்காரனை குணமாக்கினார். இன்னும் அநேக அற்புதங்களை அவர் செய்தார். "அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாது [யோவா 21 : 25]. ஆனால் "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது [யோவான் 20 : 31].

முதல் நூற்றுண்டிலிருந்த அப்போஸ்தலர்களும் ஆதி கிறிஸ்தவர்களும் இந்த அற்புதங்களைச் செய்தார்கள். தாங்கள் தேவனுல் அனுப்பப்பட்டவர்கள். தேவனுடைய செய்தியைத்தான் கூறுகிருர்கள் என்று கேட்பவர் விசுவாசிக்கத்தக்தாக, வசனத்தை உறுதிபடுத்த அவைகளைச்செய்தார்கள் [மாற்கு 16 :17–20, எபி. 2 : 1–4]. ஏனெனில் அப்பொழுது புதிய ஏற்பாடு முழுவதும் புத்தக வடிவிலே இல்லாமலிருந்தது.

அடுத்தபடியாக, சிலர், அப்போஸ்தலர் தங்கள் கைகளை வைப்பதினுல் அற்புதங்களை செய்யும் விசேஷித்த இந்த வரத்தைப் பெற்றனர். அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டு, அப்போஸ்தலர்கள் தேவ ஆவியினுல் வழிநடத்தப்பட்டு, தாங்கள் நேரில் கண்ட சாட்சியங்களை, கிறிஸ்துவின் வார்த்தைகளை எழுதி வைத்திருக்கின்றனர். அதன் தொகுப்பே புதிய ஏற்பாடு. இனிமேலும் அற்புதங்களுக்கு அவசியமில்லை. அப்படி என்றுல், கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாருதவராயிற்றே [எபி 13 : 8], அவருக்கு வல்லமை இல்லையா என்று கேட்கலாம். கிறிஸ்துவினுடைய வல்லமையை ஒருபோதும் நாங்கள் கேள்வி கேட்கவில்லை. இன்று அற்புதங்களுக்கும், அடையாளங்களுக்கும் அவசியம் இல்லை என்று தான் கூறுகிரேம்.

எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாத வியாதிகளையும் நாங்கள் குணப்படுத்துவோம் என்று கூறிக்கொண்டு பெரிய கூட்டங்களை ஏற்பாடு செய்கின்றனர். சிலர் யாரையும் குணப்படுத்த முடியாதபோது, வருகிறவர்களிடத்தில் விசுவாசம் இல்லை என்று கூறிவிடுவர். கிறிஸ்து, சம்பந்தப்பட்ட அந்த மனிதனின் விசுவாசத்தைப் பொருட்படுத்தாமல், வியாதியினின்றும் அவர்களை குணமாக்கி இருக்கிருர். பவுல் தனக்கிருந்த மாம்சத்தின் முள் நீங்கும்படியாக மூன்று முறை வேண்டிக்கொண்டிருக்கிருர். ஆனுல் குணமடையவில்லை. "கர்த்தர் என் கிருபை உனக்கு போதும்" என்ருர் [2 கொரி. 12 : 8, 9].

இந்த வியாதிகளை குணமாக்கும் வரத்தை மற்றவர்களுக்கு தன் கைகளை வைப்பதினுல் அருளிச்செய்த அப்போஸ்தலனுகிய பவுலே துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனுக விட்டு வந்திருக்கிருர் [2 தீமோ. 4 : 20]. இவர்களுக்கெல்லாம் விசுவாசம் இல்லையா? வியாதி வரும்பொழுது எல்லாம், நாம் குணமாக்கிக்கொண்டே வந்தால் எபி. 9 : 27–ல் கூறி உள்ளபடி "அன்றியும் ஒரேதரம் மரிப்பது" எப்பொழுது?. பவுல் கூறுகிருர், "ஆனபடியினுலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனுனது அழிந்தும், உள்ளான மனுஷனுனது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" [2 கொரி, 4 : 16]. வியாதி வந்தால் தேவன் நமக்கு தந்த உபகரணங்களை, மருந்துகள், மருத்துவ சிகிச்சை முதலியவைகளை பயன்படுத்தலாம்.

இவ்வுலகில் இருக்கும்வரை, வியாதி, துயரம், மரணம் இவற்றால் அலைக்கழிக்கப்படுகிறோம். ஆனால் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்து, ஞானஸ்நானத்தில், கிறிஸ்துவின் ரத்தத்தோடு சம்பந்தப்பட்டு, பாவங்களிலிருந்து கழுவப்பட்டு, தேவனுடைய பிள்ளையாக அவருடைய குடும்பத்தில் மறுபடியும் பிறந்திருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்கப் பட்ட வாக்குத்தத்தத்தை பாருங்கள்.

"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" [2 கொரி. 5 : 1]. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்திலும் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படி இல்லாதிருந்தால் நான் சொல்லி இருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்" [யோவான். 14 : 1,2].

நம்முடைய நண்பனான யோபு உடல் வலிமை இழந்த இந்த நிலையிலும் "பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றி குறை சொல்லவுமில்லை" [யோபு. 1 : 22]. தேவனும் நம் ஆரோக்கியத்தில் அக்கறை உள்ளவராக இருக்கிறார். நம்முடைய சரீரமும், ஆவியும் கர்த்தருக்கு சொந்தம் [1 கொரி. 6 : 19, 20]. நம்முடைய சரீரத்தின் அவயவங்களை நீதியின் ஆயுதங்களாக [ரோமர். 6 : 12, 13], நம்மு டைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் [ரோமர். 12 : 1,2]. ஆகவேதான் நம்மால் முடிந்த அளவு உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டு, அந்த சக்தியை தேவனுடைய ஊழியத்தில் செலவிடவேண்டும். அப்படி என்றால் தேக ஆரோக்கியமில்லாதவன் தேவனுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று அர்த்தமா? இல்லை. அவர்களாலும் கூடும். ஆரோக்கியமுள்ள வர்களைக் காட்டிலும் ஆரோக்கியமில்லாத வியாதியஸ்தர்கள் நல்ல இரக்கம், பொறுமை, மகிழ்ச்சிபோன்ற நல்ல சுபாவத்தை உடையவர்களாக இருக்கின்றனர்.

இப்படிப்பட்ட நல்ல குணங்கள் மூலம், வலியின் மத்தியிலும் அவர்கள் தங்கள் வெளிச்சத்தை மற்றவர் முன்பாக பரப்பக்கூடும்.

அடுத்தபடியாக, சாத்தான் யோபுவை சோதிக்க, அவனுடைய மனைவி யை ஏவி விட்டான். இந்த ஸ்திரீயைக்குறித்து சொல்லப்பட்டிருப்பதெல்லாம் ஒரே வசனம்தான். ஆனால் அவைகள் கதை கதையாக அவளுடைய குணத்தை பறை சாற்றும். அப்பொழுது யோபின் மனைவி அவனைப் பார்த்து, "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" [யோபு. 2 : 9]. அவள் சாத்தானின் கருவியாக மாறி இருந்தாள் என்பதற்கு இதற்குமேல் என்ன சாட்சி வேண்டும்?.

உலகமே தன்னை கைவிட்டாலும், தனக்கு என்று ஒருவள் இருக்கிறுளே என்று யோபு சமாதானம் அடைந்த கட்டத்தில், அவளே தனக்கிருந்த ஒரே நம்பிக்கையான தேவனை, தூஷித்து ஜீவனை விடும் என்று கூறியபோது யோபு எப்படித்தான் அதை தாங்கிக்கொண்டானே! நமக்கு வரும் பெரிய சோதனைகள் எல்லாம், நம்முடைய அன்புக்குப் பாத்திரமானவர்களிடத்திலிருந்தே வரும். அப்பொழுது நம் நெஞ்சு வெடித்து விடுவதைப் போலல்லவா இருக்கும்.

இந்த இல்லத்தரசிகள் சாத்தான் கைப்பொம்மையாக தங்கள் புருஷன்மார்களை தூண்டிவிடும்போது, அவன் தன்னை மறந்து, இவர்களை திருப்திபடுத்த, திருட்டு போன்ற அநேக துணிச்சலான காரியங்களை செய்து, அதன் பிரதிபலனை துன்பத்தை அனுபவிக்கின்றனர். யோபு நொந்துபோய், மற்றவரிடத்தில் இரக்கத்தை நோக்கி இருந்த அந்த சமயம் பார்த்துத்தான அவன் உற்சாகத்தை குறைக்க அவள் அப்படிக் கூற வேண்டும்! ஆம், உற்சாகத்தை குறைப்பதுதான் சாத்தான் உபயோகிக்கும் மிகப்பெரிய ஆயுதம். நாம் ஒருவரையொருவர் தேற்றக்கூடிய நிலையில் இருக்கிறோம். அப்படி உற்சாகம் குறைக்கப்படும்போது அதிகமாக தேவனிடத்தில் அண்டிக்கொள்ள வேண்டும்! அதைத்தான் யோபு செய்தான். யோபு மனைவியைப் பார்த்து, " நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோல பேசுகிறாய். தேவன் கையிலே நன்மையைப்பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றான். இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை." [2.10].

---

பாடம் 7

# யோபும் அவன் நண்பர்களும்

**யோ**பு எப்படி சாத்தானுல் வாதிக்கப்பட்டான் என்று கடந்த பாடத்தில் படித்தோம். இப்பொழுது அதன் தொடர்ச்சியாக, எவ்வாறு நண்பர்களால் துன்பப்பட்டான் என்று பார்ப்போம்.

யோபுவின் மூன்று நண்பர்கள் அவனைத் தேற்ற வந்தனர். பின்பு அவர்களே அவனை பழி சுமத்துகிறவர்களாக மாறினர். எரிகிற நெருப்பில் எண்ணெய் விடுவதைப் போன்று, ஏற்கெனவே நொந்து போய் இருக்கும் நம் யோபுவை குற்றம் சுமத்த ஆரம்பித்தனர். நீ ஏதாகிலும் பாவம் செய்திருப்பாய் அதன் பிரதிபலனுகத்தான் கஷ்டப்படுகிறுய் என்றனர். ஏன் இந்த கஷ்டங்கள் என்று யோபுவுக்கும் தெரியாது. இந்த மூன்று நண்பர்களுக்கும் விளங்கவில்லை. இந்நிலையில்தான் யோபுவின் மீது இந்தப் பழியை சுமத்தத்தொடங்கினர். யோபுவுக்கும், அவன் மூன்று நண்பர்களுக்குமிடையே நடந்த சம்பாஷணைகள் தான் இந்த கதையின் பெரும்பகுதி.

"உம்முடைய அக்கிரமத்திற்கேற்றபடி தேவன் உம்மைத் தண்டிக்கவில்லையென்று அறிந்துக்கொள்ளும்" என்றனர் [யோபு. 11 : 6]. அவர்கள் அப்படிக்கூறி விட்டதனுல், அப்படியே ஆகிவிடுமா? யோபு அந்த குற்றச்சாட்டுக்கு பொறுப்பாளி அல்ல. அது வீண்பழி என்று நாம் அறிவோம். ஏனெனில், யோபு பாவத்தைப் பற்றியும், அதன் பிரதிபலனைப்பற்றியும் நன்ருக அறிவான். "நான் பாவம் செய்தால் அதை நீர் என்னிடத்தில் விசாரித்து, என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமல் விடீர். நான் துன்மார்க்கனுயிருந்தால் எனக்கு ஐயோ! " என்று அவனே கூறுகிருன் [10 : 14, 15]. அப்படியும் தவறு செய்திருந்தால் அதற்கு பரிகாரமாக எதைச் செய்யவேண்டுமோ அதைச்செய்து மீண்டும் தேவனேடு உறவை புதுப்பித்துக்கொள்ளும் உணர்வுடையவனுக இருந்தான். "நான் மாயையில் நடந்தேனே, என் கால் கபடு செய்யத் தீவிரித்ததோ என்று சுமுத்திரையான தராசிலே தேவன் என்னை நிறுத்தி, என் அக்கிரமத்தை அறிவாராக" [31 : 5, 6].

தேவனே யோபுவைக்குறித்து சாட்சி கூறி இருக்கிருர் என்ருல் யோபு எப்படிப்பட்ட உத்தமன் என்று பாருங்கள் [யோபு 1 : 7, 8]. அது மாத்திரமல்ல, முடிவில் யோபுவின் நண்பர்கள் போட்ட கணக்கு தவறு என்பதை தேவன் நிருபித்து, இவர்கள் இந்த அபாண்ட பழியை சுமத்தியதற்காக அவர்களை கடிந்துகொண்டார் [42 : 7, 8]. அப்படி ஒருவர் மீது அபாண்டமாக பழி சுமத்துவது பாவமான செயல் [நீதி. 17 : 15]. இயேசு கிறிஸ்துவும் பழி சுமத்தப்பட்டார். "தேவ தூஷணம் பேசுகிருன்" என்ருர்கள். முடிவில் ஒரு

பாவமுமறியாத அவரை கல்வாரி சிலுவையிலறைந்து கொன்றார்கள். கிறிஸ்துவினுடைய நண்பர்களும் அவரை கைவிட்டுச் சென்றனர்.

நாமும் அப்படியே நண்பர்களால் கைவிடப்படுவோம். நம்மிடத்தில் உள்ள ஆஸ்தி தீர்ந்ததும் சிலர் நம்மை விட்டு செல்வார்கள். தைரியம் இல்லாமையினால் சிலர் நண்பர்களை கைவிட்டுச் செல்வர். "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்பதற்கிணங்க யூதாஸ், கிறிஸ்துவோடு உண்டு உறங்கி 3 1/2 ஆண்டுகாலம் அவர் அன்பை ருசித்துவிட்டு, கேவலம் 30 வெள்ளிக்காசுக்காக அவரைக் காட்டிக்கொடுக்க முன்வந்தான். நம்முடைய யோபுவின் நிலையைப் பாருங்கள். "என் பந்து ஜனங்கள் விலகிப் போனார்கள். என் சினேகிதர் என்னை மறந்துவிட்டார்கள். என் வீட்டு ஜனங்களும் என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள். என் பிராண சிநேகிதர் எல்லோரும் என்னை வெறுக்கிறார்கள். நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதியானார்கள் " [19 : 14–19].

எல்லோராலும் கைவிடப்படும்போதுதான் நாம் தேவனை நெருங்கி பற்றிக்கொள்வோம். நாம் கிறிஸ்துவுக்குள் நெருங்கி ஜீவிக்கிறவர்களானால் இந்த வாக்குதத்தத்தால் தேற்றப்படுவோம். "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியம் கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" [எபி. 13 : 5, 6].

கடைசியாக யோபு, அசட்டை பண்ணப்பட்டு, அவமானச்சின்னமாக்கப் பட்டான். யோபுவுக்குக் கிடைத்த பரிசைப் பாருங்கள். "சிறு பிள்ளைகளும் என்னை அசட்டை பண்ணுகிறார்கள். நான் எழுந்தால் எனக்கு விரோதமாய் பேசுகிறார் கள்" [யோபு. 19 : 18].

"இப்பொழுது நான் அவர்களுக்கு பாட்டும் பழமொழியும் ஆனேன். என்னை அருவருத்து, எனக்கு தூரமாகி என் முகத்துக்கு முன்பாகத் துப்ப கூசாதிருக்கிறார்கள் [30 : 9, 10]. இப்படி அவனை கேலி பரியாசம் பண்ணியது எவ்வளவு மனோவேதனையை உண்டுபண்ணி இருக்கும். சரீர பிரகாரமான துன்பத்தினைக்காட்டிலும் அதிகமான வியாகுலத்தை அடைந்திருப்பான். காரணம் அநியாயமாக அக்கிரமக்காரன் என்று எண்ணப்பட்டான். சிலர் இப்படியொரு சந்தர்ப்பத்திற்காகவே காத்து இருந்திருப்பார்கள்.

ஆவிக்குரிய விஷயத்தில் வைராக்கியமுள்ள அவனை, தங்களைக் காட்டிலும் தேவ பக்தியுள்ள அவனை, ஒன்றுமில்லாமற் செய்யும் பணியில் நான், நீ என்று போட்டிபோடாமலா இருப்பார்கள்.

இப்படிப்பட்ட, இதற்கு மேலான துன்பத்தை கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே அனுபவித்தார். சாத்தான் ஆவிக்குரிய இந்த பெரிய மனிதனை, தேவனுடைய குமாரனையே தோற்கடித்துவிட்டதாக எண்ணி இறுமாந்திருந்தான்.

"அப்பொழுது அவருடைய முகத்தில் துப்பி, அவரை குட்டினார்கள். சிலர் அவரைக்கன்னத்தில் அறைந்து கிறிஸ்துவே உம்மை அடித்தவன் யார் அதை ஞானதிருஷ்டியினால் சொல்லும் என்றார்கள் [மத். 26 : 67, 68].

"அப்பொழுது பிலாத்து பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான். அப்பொழுது தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரண்மனையிலே கொண்டுபோய் போர்ச் சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்து, அவர் வஸ்திரங்களை கழற்றி சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின் மேல் வைத்து அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர் முன்பாக முழங்காற்படியிட்டு, யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரை பரியாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, அந்த கோலை எடுத்து அவரை சிரசில் அடித்தார்கள். அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தை காண்பிக்கும் பொருட்டு இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி அவர் சிரசுக்கு மேலாக வைத்தனர். அப்பொழுது அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடே கூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி, தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே ரட்சித்துக்கொள். நீ தேவனுடைய குமாரனானால், சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரை தூஷித்தார்கள்" [மத். 27 : 26–40].

இதுதான் மிகப்பெரிய சகிக்கமுடியாத சோதனை. கொடுமையிலும் கொடுமை. சரீரப் பிரகாரமான கஷ்டத்தை தாங்கிக்கொள்ளலாம். ஆனால் முறிந்துபோன ஆவியை யாரால் தாங்கக் கூடும்? "கிறிஸ்து தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து" என்று எபி. 12 : 2 ல் அதன் ஆசிரியர் கூறுகிறார்.

---

பாடம் 8

# யோபுவின் உள்ளான குழப்பம்

கடந்த பாடத்தில் யோபுவுக்கு நேர்ந்த சோதனைகளைப்பற்றி பார்த்து வந்தோம். இந்தப் பாடத்தில் அவனுக்குள்ளே எழும்பிய புயலை சற்று ஆராய்வோம். இதற்குள் யோபு நம்மிலே ஒருவனாக, நம்முடைய நெருங்கிய நண்பனாக மாறி இருப்பான் என்று எண்ணுகின்றேன். நம்மில் பலர் அவனைப்போலவே அநேக சோதனைகளுக்குள்ளாக்கப்பட்டிருப்போம். ஆகவே அந்த அடிப்படையில் நம்முடைய சகோதரனைப்போலவே அவனை எண்ணி, நம்மை அவனுடைய ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கிறோம்.

ஒரு நாள் மாலை நேரம், வானம் இருண்டது. கரு மேகங்கள் சூழ்ந்து கொண்டன. திடீரென்று பேரிரைச்சலுடன் இடி, மின்னலோடு மழை பெய்ய ஆரம்பித்தது. தெரு விளக்குகளும் சிறிது நேரத்தில் அணைந்துபோயின. எங்கு பார்த்தாலும் கும்மிருட்டு. பாதையிலே நடப்பவரை கூட கண்டுகொள்ள முடியவில்லை. எங்கும் அந்தகாரம். அந்த பயங்கரமான நிலையில் ஒரு உருவம் தன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது. சடிதியில் ஒருமரம் வேரோடு சாய்ந்தது. இன்னும் ஒரு கணம் தாமதித்திருந்தால் அவன் மேலேயே விழுந்து இருக்கும். கையிலிருந்த டார்ச்லைட் வெளிச்சத்தில் உருவத்தை நோக்கினேன்.

அவன் என் நண்பன். ஏனப்பா இவ்வளவு பயங்கரமான இருட்டில் தன்னந்தனியாக எந்தவிதமான பயமுமில்லாமல் சென்றுகொண்டிருக்கிறாயே என்று கேட்டதற்கு அவன் அளித்த பதில் என்னை சிந்திக்க வைத்தது. "எனக்குள்ளே எழும்பி என்னை அலைக்கழிக்கும் புயலை நீ அறிவாயானால், என் மனம் படும் போராட்டத்தை உணர்வாயானால், நீ காணும் இந்த புறம்பான இடி மின்னல் இருட்டை, ஒரு பொருட்டாக எண்ணமாட்டாய்" என்றான்.

உங்களில் யாரேனும் இப்படிப்பட்ட நிலையில் இருந்திருக்கிறீர்களா? நமக்கு ஏற்படும் துன்பங்களில், நமக்குள்ளே எழும்பும் மனப்போராட்டங்களைப் போல பெரியது எதுவும் இருக்கமுடியாது. சங்கீதக்காரனும் அப்படிப்பட்ட சங்கடத்தில் இருந்திருக்கிறான். "என் ஆவி என்னில் தியங்குகிறது. என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது" [சங். 143 : 4]. "மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தை தாங்கும். முறிந்த ஆவி யாரால் தாங்கக்கூடும்" என்றார் சாலமோன் [நீதி 18 : 14].

சாத்தானோடு நமக்கிருக்கும் போராட்டங்களில் பெரியது, நமக்குள்ளே எழும் போராட்டங்கள். நமக்கு புறம்பே ஏற்படும் எத்தனையோ காரியங்களை நம்மால் தவிர்க்க முடியாது. ஆனால் நமக்குள்ளே ஏற்படும் காரியங்களை கட்டுப்படுத்தக்கூடும். நண்பன் யோபு நமக்கு உதவி செய்வார்.

## முதலாவது, தனிமை :

கசப்பான துயரம் தனிமையைத்தான் நாடும். யோபுவும் தனிமையில் சாம்பலில் உட்கார்ந்திருக்கிறுன். தனிமைக்கும் ஏகாந்தத்துக்கும் வித்தியாச முண்டு. பலர் சூழ இருப்பினும், ஒருவன் தனிமையை உணரமுடியும். யோபு, குடும்பம் நண்பர்களால் கைவிடப்பட்டும் தனிமையின் உச்சகட்டத்தை எப்பொழுது உணர முடிந்தது என்றல், கர்த்தரும் தன்னை கைவிட்டார் என்று எண்ணக் கூடிய நிலை வந்தபொழுது [யோபு. 23 : 3—9].

கிறிஸ்து பட்ட பாடுகளின் உச்சக்கட்டம், சிலுவையிலே உலகத்தின் பாவங்கள் எல்லாம் அவரை அமுத்த, தேவன் தம் குமாரனே விட்டு திரும்ப, முறிந்த ஆவியோடே அண்ணல் இயேசு தனிமையில் கதறுகிறுர். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னே கைவிட்டீர்?". மருத்துவர்கள், தனிமை தான் இருதய நோவுக்கு காரணம் என்று கூறுவர். இருந்த போதிலும் கர்த்தர் நம்மோடு கூட இருப்பின் நாம் என்றும் தனிமையில் இருக்க மாட்டோம். இது யோபுவின் விஷயத்திலும் உண்மைதான். ஆனல் யோபு அப்பொழுது அறியவில்லே.

கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்து பரமேறிச் செல்லுமுன்னர், பிரதான கட்டளேயை கொடுத்தபோது அவர் கூறியதாவது, "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளேயும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளேயிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றுர். நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்திருந்தால் அவர் நம்முடனே கூட என்றும் இருப்பார். அப்பொழுது தனிமையை என்றும் உணர மாட்டோம்.

## இரண்டாவது, மரணத்தால் வந்த துன்பம் :

அந்த தனிமையான யோபுவின் இருதயத்தில், தன் பிள்ளேகள் ஒரேயடியாக மரித்ததினுல் வந்த துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. 10 மாதம் சுமந்து பெற்ற தன் அருமை பிள்ளேயை பறிகொடுத்துத் தவிக்கும் தாய், தன் மகனே உச்சிமோந்து போஷித்து, வளர்த்து, ஆளாக்கி, ஐயகோ! அவனே இழந்து பரிதவிக்கும் தகப்பன். இவர்களுக்குத் தெரியும் அந்த துயரம் எப்படிப்பட்டது என்று. அன்புக்கு பாத்திரமானவர்கள் தங்களே விட்டு பிரிக்கப்படும்போது, ஒவ்வொருவனும் கண்ணீர் மல்க, யோபுவைப்போல் இப்படி கதறுவான், "என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும். அப்பொழுது அது கடற்கரை மணலேப் பார்க்கிலும் பாரமாயிருக்கும். ஆகையால் என் துக்கம் சொல்லிமுடியாது" [யோபு. 6 : 2,3].

மனித பந்தம் இருக்கிறதே அது நெருங்கியது. விலையேறப்பட்டது. தேவன் அன்பாயிருக்கிறார். தேவனைப்போலவே, மனிதனும் மற்றவர்களை நேசிக்கவும், நேசிக்கப்படவும் தகுதியுடையவனாக இருக்கிறான். இரண்டு உள்ளங்கள் இணைக்கப்படும்போது அதில்தான் என்ன பூரிப்பு, மகிழ்ச்சி! அதே சமயம் அவைகள் பிரிக்கப்படும் போதுதான் என்ன துக்கம்! இப்படி பிரிவால் வாடி, கண்ணீர் கடலில் மிதப்பவர்கள் எல்லோருக்கும், ஒரே ஆறுதல் என்னவெனில், அவர்கள் உயிரோடிருக்கும் காலத்தில் அவர்கள் அனுபவித்த அந்த நல்ல நாட்களை நினைவு கூறுவதே.

அதைத்தவிர வேறு எந்த நம்பிக்கையும் கிடையாது. ஆனால் கிறிஸ்தவனுக்கோ, ஒரு பெரிய நம்பிக்கை உண்டு. அது என்னவெனில், இவ்வுலகில் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தாலும், கடைசி நியாயத் தீர்ப்பு நாளில் ஒருவரையொருவர் சந்திக்கக்கூடிய நம்பிக்கை உண்டு. பவுல் கூறுகிறார், "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்வர்களைப்போல, துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம். அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்கு சொல்லுகிறதாவது, கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையினால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" [1 தெசலோ. 4 : 13–18]. இந்த வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்தவன்தான் யோபு, எனினும், கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்துக்கொண்டார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லத்தக்கவனாக இருந்தான்.

## மூன்றாவது, தூக்கமின்மையும் அயர்வும் :

பல நாட்கள் தூக்கமில்லாமல் கஷ்டப்பட்டவனுக்குத் தெரியும், தூக்கத்தின் மகிமை. யோபு தூக்கமில்லாமையால் அவதியுற்றான். "நான் படுத்துக்கொள்ளுகிறபோது, எப்பொழுது எழுந்திருப்பேன், இராக்காலம் எப்பொழுது முடியும் என்று சொல்லி, கிழக்கு வெளுக்கு மட்டும் அரண்டு புரளுகிறதினால் எனக்குப் போதுமென்று போகிறது [யோபு. 7 : 4].

எப்பொழுதும் இரவில் தான் பிரச்சனைகள் கொடூரமாக காட்சி தரும். பகலில், ஓடியாடி வேலைசெய்து வரும்பொழுது பிரச்சனைகளை மறந்து திரிகிறோம். ஆனால் இரவின் அமைதியில் எல்லாதுன்பங்களும் ஒன்று சேர்ந்து நம் முன்னே வந்து நிற்க காண்கிறோம். பல சமயங்களில் நாம் ஒவ்வொருவரும் தூக்கமின்மையால் கஷ்டப்பட்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட சமயங்களில் எண்ண அலைகளை சிதறடிக்காமல் நம்மை நாமே சோதித்து அறியவும், அமைதியாக தேவனோடு ஜெபத்திலே உறவாடவும், அவர் நமக்கு போதித்த கட்டளைகளை நினைவு கூறவும் செய்யலாம். தேவன் நமக்களித்த வாக்குறுதிகளை எண்ணிக் கொண்டிருக்கலாம். இப்படியாக வெளியே இருந்து வந்த புயலைக் காட்டிலும் உள்ளே இருந்து புறப்பட்டு வந்த புயலால் நம்முடைய யோபு அலைக்கழிக்கப்பட்டான்.

---

பாடம் 9

# அன்புக்குப் பாத்திரமானவர்களால் யோபுக்கு வந்த ஏமாற்றம்.

நீங்கள் எப்பொழுதாவது உங்களுடைய நண்பர்களால் ஏமாற்றப்பட்டிருக்கிறீர்களா? உங்களுடைய அன்புக்குப் பாத்திரமானவர்களால் கைவிடப்பட்டிருக்கிறீர்களா? யாரோ ஒருவர் உங்களை நேசிப்பதுபோல் நடித்து ஏமாற்றி இருக்கிறார்களா? மனித இதயத்தை சுக்கு நூறாக உடைக்கும் கூர்மையான வலிகளில் இதுவும் ஒன்று. மரணத்தை காட்டிலும், ஆழமாக இதயத்தை வலிக்கச்செய்யும். யோபு தன் அருமை மனைவியாலும், நண்பர்களாலும் கைவிடப்பட்டபோது, இது உண்மைதானா என்று தன்னையே நம்ப முடியாத நிலையில் இருந்தான்.

இயேசுவோடு உண்டு, உறங்கி, நெருங்கி ஜீவித்த உற்ற நண்பனான யூதாஸ், தன்னை விரோதிகளிடத்தில் காட்டிக் கொடுத்தபோது, கிறிஸ்துவின் உள்ளத்தில் எப்படிப்பட்ட வலி உண்டாயிருக்கும். இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபோது சங்கீதக்காரன் கூறுகிறார், "என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமாயிருந்து, எனக்கு பொல்லாங்கு நினைத்து, தீரா வியாதி அவனைப் பிடித்துக்கொண்டது, படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள். என் பிராண சிநேகிதனும் நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும் என்மேல் குதிகாலைத் தூக்கினான்" [சங். 41 : 7–9]. சங்கீதக்காரன் தாவீது இந்த உணர்ச்சிகள் எப்படிப்பட்டவை என்று தன் அனுபவத்திலே கண்டு இருக்கிறான். அவனுடைய சொந்தக்குமாரன் அப்சலோமே தனக்கு விரோதமாக கலகம் செய்ய முன் வந்தான். இது தேவனுக்கு விரோதமான செயலாகும். ஏனெனில் தாவீது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவனாயிருந்தான். தனக்கு ஒரு காலத்தில் இருந்த உயர்ந்த ஒழுக்க நெறியை விட்டு தன் மகன் இப்படி போனது தாவீதின் உள்ளத்தை தாக்கியது. அப்பொழுது மகன் இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டவுடன், அவன் வருத்தம் இன்னும் அதிகமாயிற்று. முறிந்த ஆவியோடே இதயத்தை பிளக்கும் கதறல், "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே; நான் உனக்குப் பதிலாக செத்தேனானால் நலமாயிருக்கும். அப்சலோமே, என் மகனே, என் மகனே என்று சொல்லி அழுதான் [2 சாமு. 18 : 33].

## நான் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை என்ற எண்ணம்

என் பிராணன் காற்றைப் போலிருக்கிறது என்று யோபு கூறினான் [யோபு. 7 : 7]. தனக்கும், மற்றவர்களுக்கும் தன்னால் ஒரு பிரயோஜனமுமில்லை என்று எண்ணினான். கடுமையான வியாதியால் பீடிக்கப்பட்டு, புழுத்துப்போன சரீரத்தையும், எலும்பும் தோலும், அதற்குள்ளே அலைக்கழிக்கப்பட்ட அமைதியில்லாத ஆவியையும் உடையவனாக இருந்தான். ஆகவே ஜீவியத்தினால் என்ன நன்மை? அதில் எந்தவித உபயோகமுமில்லை என்பதாக எண்ணினான். ஆனால் பிற்கால சந்ததி இந்தக் கதையைப் படித்து ஆறுதல் பெறுவார்கள் என்று அவனுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட பிரச்சனைகளால் நீங்கள் அவதிப்படும்போது தூரத்தில் நின்று கவனிக்கும் அநேகர், இதில் உங்களுடைய வெற்றியைக்கண்டு தாங்கள் தேற்றப்படுவர் என்று உங்களுக்குத் தெரியாது. எந்த ஒரு மனிதனுக்கும் தன் சொந்த வாழ்க்கையின் மதிப்பை எடைப் போடக்கூடிய ஆற்றல் கிடையாது.

இவை எல்லாம் சேர்ந்து யோபுவின் இதயத்தை பெரிய துயரத்தால் மூழ்கடித்தது. இந்நிலை வரும்பொழுது தற்காலிகமாக, எந்த பலவானும் வளைந்துவிடுவான். அடுக்கடுக்காய் துன்பங்கள் வந்து சந்தர்ப்பங்கள் அவனுக்கு விரோதமாக இருக்கின்ற நிலையில்தான் யோபு என்ன செய்வதென்றறியாது இருந்தான். "அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்று கண்டு, ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையையும் பேசாமல், இரவு, பகல் ஏழுநாள் அவனோடுகூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள்" [யோபு. 2 : 13]. உற்சாகமிழந்துபோன அந்தத் துயரப்படுகிறவன் கூறியது, "அழுகிறதினால் என் முகம் அழுக்கடைந்தது. மரண இருள் என் கண்ணிமைகளின்மேல் உண்டாயிருக்கிறது" [யோபு. 16 : 16].

அந்தப்படி யோபு ஒரு கோழையுமல்ல. ஒரு தைரியசாலிதான். எப்பேர்ப்பட்ட சக்தி, குணம் உடையவனாயிருந்தாலும், அழுவதற்கும் ஒரு காலமுண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. இதயமே வெடித்துப்போகும் அளவுக்கு உணர்ச்சிகளால் பீடிக்கப்பட்டிருக்கும்போது கண்ணீர் ஒன்றுதான் பாதுகாப்பான வழி. யோபுவுக்கு அந்த ஒரே மருந்துதான் இருந்தது. கண்ணீரினால், கலங்கிப்போன இதயத்தைத் தேற்றிக்கொண்டான்.

வாழ்க்கையே வெறுப்புண்டாகுமளவுக்கு துயரம் நம்மை இழுத்து செல்லும். யோபு தன் மனைவி கூறியபடி தற்கொலை செய்யாமல் போனாலும், மரணத்தை வாஞ்சிக்கிறவனாயிருந்தான். "அதினால் என் ஆத்துமா, நெருக்குண்டு சாகிறதையும், என் எலும்புகளோடே உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும், மரணத்தையும் விரும்புகிறது என்றான் [யோபு. 7 : 15].

இப்படிப்பட்ட பயங்கரமான நிலைக்குள்ளாக்கப்பட்டவன் யோபு மாத்திரமல்ல. எரேமியா என்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியும் கூட. "நான்

பிறந்த நாள் சபிக்கப்படுவதாக. உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்படக்கடவன். அந்த மனுஷன் கர்த்தர் மனம் மாறாமல் கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப் போலிருந்து, காலமே அலறுதலையும், மத்தியான வேளையிலே கூக்குரலையும் கேட்கக் கடவன். என் தாயார் எனக்கு பிரேதக்குழியும் நான் என்றைக்கும் பிரசவியாத சூலுமாய் இருக்கத்தக்கதாகக் கர்ப்பத்திலே நான் கொலை செய்யப்படாமற் போனதென்ன? நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு என் நாட்கள் வெட்கமாய்க் கழியும் படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன?" [எரே. 20 : 14–18]. எலியா தீர்க்கதரிசியும் "போய் ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, நான் சாகவேண்டும் என்று கோரி, போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்" என்றான் [1 ராஜா. 19 : 4].

இப்படிப்பட்ட துன்பங்கள் முதியோரை மாத்திரமா ஆட்கொள்ளுகிறது என்றால் இல்லை. இளவயதினரும் பாதிக்கப்படுகின்றனர். கல்லூரி மாணவர்களிடையே மோட்டார் விபத்துகளுக்கு அடுத்தபடியாக இருப்பது தற்கொலைதான். உள்ளான புயலினால் அலைக்கழிக்கப்பட்டு, பொறுககமுடியாத துன்பம் வந்து, அதை சமாளிக்க முடியாத நிலையில் யோபுவைப் போல் அவர்கள் மரணத்திலே அமைதி காணவிழைகின்றனர். அவிசுவாசிகளுக்கும், கீழ்ப்படியாதவர்களுக்கும் மரணம் இளைப்பாறுதலைத் தராது. யோபு, எலியா, எரேமியா போன்றவர்கள் ஜீவிக்கவேண்டும் என்ற ஆசையை இழந்துவிட்ட போதிலும், தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ள என்றும் முயற்சி செய்யவில்லை. ஏனெனில், இந்த சரீரம் தேவனுடைய ஆலயம். ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார் [1 கொரி. 3 : 16, 17]. தற்கொலை என்பது நம்முடைய பிரச்சினைகளுக்கு முடிவல்ல.

சாத்தானும், பாவமும் இவ்வுலகில் இருக்கும் வரை பிரச்சினைகள் இல்லாமல் இருக்காது. மனிதன் சிருஷ்டிக்கப்படும்போது பாவமில்லாமல் பரிசுத்தமான நிலையிலிருக்கிறான். பொறுப்பேற்கும் வயது வந்தவுடன், தேவனுடைய கட்டளைகளை மீறி பாவம் செய்கிறான் [1 யோவான். 3 : 4]. பாவம் மனிதனை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது [ஏசா. 59 : 2]. பாவத்தின் சம்பளம் மரணம் [ரோமர். 6 : 23]. பாவத்தை செய்கிறவன் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். "நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படி நடந்து நமது மாம்சமும் மனமும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தின் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்து, தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் [எபே. 2 : 3–5].

தேவன் நம்முடைய பாவத்திற்காக தம்முடைய குமாரனுகிய கிறிஸ்துவை கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்த வைத்தார். அந்த இரத்தத்திஞலே பாவ மன்னிப்பாகிய மீட்பு அவருக்குள் உண்டாயிருக்கிறது [எபே. 1 : 7]. நீங்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, பழைய பாவங்களே விட்டு மனந்திரும்பி, கிறிஸ்துவை வாயிஞல் அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்ருல் இரட்சிக்கப்பட்டு, கர்த்தருடைய சபையிலே அவரால் அங்கமாக்கப்படலாம். அப்போது, தேவ சமாதானத்தை பெறுகிருேம். பிறகு வேத வசனமாகிய வெளிச்சத்தில் நடந்தால், என்ன கொடிய பிரச்சனேகள் வந்தாலும், அவைகளே தாங்கத்தக்க சக்தியையும், பெலனேயும், அவற்றினின்று விடுபடும்படியான போக்கையும் தேவன் உண்டாக்குவார் [1 கொரி. 10 : 13].

---

பாடம் 10

# யோபுவின் ஆவிக்குரிய சந்தேகங்கள்

நம்முடைய நண்பன் யோபு, இப்படியாக வெளியேயிருந்து வந்த புயலினாலும் அலைக்கழிக்கப்பட்டான். ஆவிக்குரிய சந்தேகங்களைக் காட்டிலும், மனிதனுடைய மன அமைதியைக் கெடுக்கக்கூடிய காரியம் ஒன்றிருக்கமுடியாது. அந்த சந்தேகங்கள், நாம் தேவனோடு வைத்திருக்கும் விசுவாசத்தின் இணைப்பை துண்டித்துவிடும். இன்று எங்கு பார்ப்பினும் குழப்பங்கள், அமைதியின்மை. தன் ஆத்துமாவைப்பற்றியும், தேவனைப்பற்றியும், மரணத்திற்குபின் எங்கு செல்வான் என்பதைப்பற்றியும் நிச்சயமில்லாமல் இருக்கும் ஒருவன், நங்கூரம் இல்லாத கப்பலைப் போன்றிருக்கிறான்.

யோபுவின் உள்ளே எழுந்த மனப்போராட்டங்களின் ஒரு காரணம் இதுதான். ஆகையினால் வாழ்க்கைப்புயலால் அலைக்கழிக்கப்பட்டு, செய்வதறியாது மிகவும் குழப்பத்திலிருந்தான். அநேக கேள்விகள் அவனது மனதை பிளந்தன. மனிதன் யார்? அவனது வாழ்க்கை, மரணம், நித்தியத்தை எங்கு கழிப்பான்? தேவநீதி? போன்ற பல கேள்விகள் அவனது மனதில் எழும்பின. எல்லாம் ஒரே குழப்பமாயிருந்தது அவனுக்கு. இன்றும் அப்படிப்பட்ட கேள்விகள் நம் ஒவ்வொருவர் மனதிலும் எழும்பி நம்மை குழப்புவதில்லையா?

அதற்கு சரியான விடை தெரியாதவரை, நாம் நம்மைப்பற்றிய நிச்சயத்தில் எப்படி இருக்க முடியும்? எப்படிப்பட்ட கேள்விகள் யோபுவின் மனதில் எழும்பின. அவைகளின் உண்மைப் பொருள் என்ன என்பதை தெரிந்துகொள்ள வாஞ்சிக்கிறோம். ஆகவே கவனத்தோடு, எங்கே, என்னோடு வேதாகமத்திற்கு வாருங்கள். மத சம்பந்தப்பட்ட எந்தக் காரியங்களானாலும், நம்முடைய பரிசுத்த வேதாகமம் அதற்கு பதிலைக் கொடுக்கும்.

முதலாவது யோபுவை வாட்டிய கேள்வி, **மனிதன் யார்?** [யோபு. 7 : 18].

ஒரு அற்ப மனிதனை தனக்கு இவ்வளவு பெரிய கஷ்டங்கள் ஏன் வர வேண்டும் என்று யோபுவுக்கு விளங்கவில்லை. அவன் கூறுகிறான், "மனுஷனை நீர் ஒரு பொருட்டாக எண்ணுகிறதற்கும், அவன் மேல் சிந்தை வைக்கிறதற்கும், காலை தோறும், அவனை விசாரிக்கிறதற்கும், நிமிஷந்தோறும் அவனை சோதிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? [யாபு. 7 : 17, 18]

மனிதன் ஒரு பொருட்டல்ல என்று இது விளங்கப் பண்ணினாலும் தேவனுடைய பார்வையில் மனிதனுடைய மதிப்பை இந்தக்கேள்வி உணரும்படி

செய்கிறது. மனிதன் யார்? பலயுகங்களாக தத்துவ ஞானிகளை எல்லாம் குழப்பிய கேள்வி இது. தாவீதும் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார் [சங். 8 : 4]. அப்படியே சிந்திக்க திறன் படைத்த ஒவ்வொருவனும் கேட்கிறான். மனிதனைப்பற்றி, அவன் ஆரம்பம், அவனது தன்மை, அவன் முடிவு இவற்றைப் பற்றி என்ன விசுவாசிக்கிறோமோ, அதைப் பொறுத்துத்தான் நம்முடைய வாழ்க்கை இயங்கும். மரணத்திற்குப் பின்னும் நிச்சயிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. இந்தக் கேள்விக்கான பதிலை நோக்குவோம்.

மனிதன்யார்? மனிதன், தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவன் என்று வேதாகமம் கூறுகிறது. [ஆதி. 1 : 27]. அப்படி என்றால் நன்மை, தீமை அறியத்தக்க திறனோடு படைக்கப்படடவன். மனிதனுக்கு மாத்திரம் தான் மனச்சாட்சி என்று ஒன்று உண்டு. தன்னைப்படைத்த தேவனைப் போலவே, தானாகவே சிந்தித்து, சுயமாக தேர்ந்தெடுத்து செயலாற்றும் திறனோடு மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான். ஆகவே தான் மனிதன், சிந்திக்கிறான், திட்டமிடுகிறான், நல்ல ஜீவியத்தை கட்ட முயற்சி செய்கிறான்.

மனிதன் ஒரு அறிவுள்ளவன். பறவையைக் கண்டான், விமானம் படைத்தான். எதிரொலி கேட்டான், வானொலி படைத்தான். இப்பொழுது சந்திரன், செவ்வாய் போன்ற கிரகங்களுக்குச் சென்று அவைகளை ஆராயத் தொடங்கிவிட்டான். கடலின் ஆழத்தையும் கண்டு இருக்கிறான். ஆனாலும் "தன் நடைகளை மனிதன் நடத்துகிறது, அவனாலே ஆகிறதல்ல" வென்று, எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறார் [10 : 23]. எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் மனிதன் ஒரு சிகரமாக விளங்குகிறான். இருப்பினும் இவனை ஏன் படைத்தேனோ என்று தேவன் மனஸ்தாபப் படுமளவுக்கு மாறி இருக்கிறான் [ஆதி. 6 : 6].

பார்வைக்கு மனிதன் சாதாரணமாக தோற்றமளித்தாலும், அவனுள் இருக்கும் ஆத்துமாவின் விலை உலகம் பூராவும் சேர்ந்தாலும் இணையாகாது. கிறிஸ்து கூறினார், "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? [மாற்கு. 8 : 36]. இன்னும் மனிதனுடைய விலையை, அவனுடைய பாவத்தில் இருந்து மீட்கும் பொருளாக கிறிஸ்துவின் ரத்தம் சிந்தப்பட்டதிலிருந்து புரிந்து கொள்ளலாம் · ரோமர். 5 : 8–9.

இதுவரை மனிதன் யார்? என்ற யோபுவின் கேள்விக்கு விடையைப் பார்த்தோம். மேலும் மனிதன் தேவனுடைய அன்புக்கும், அக்கறைக்கும் பாத்திரமான அவருடைய சிருஷ்டி. ஆகவே தான் சங்கீதக்காரன் தாவீது "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்" என்று கூறுகிறான் [சங். 139 : 14].

அடுத்த கேள்வி. மனிதன் செத்த பின் பிழைப்பானோ? [14 : 14]. : இந்த உலகத்தில் எந்த நல்ல நாளுக்குமான நம்பிக்கையை காண முடியாதவனும்

இந்த கேள்விக்கு திரும்பி இருக்கிறான். அவனுடைய அனுபவத்தின் சாட்சியங்களோ அதற்குமாருக இருந்திருக்கின்றன. உதாரணமாக, மரம் செத்தாலும், அது மறுபடியும் துளிர்த்து இளமரம் போல கிளை விடுவதை பார்த்து இருக்கிறான் [14 : 7—9]. ஆனால் ஒரு மனிதன் செத்த பின் பிழைத்ததை பார்த்தது இல்லை. ஆகவே இந்தக் கேள்வியைப் போட்டான்.

இருப்பினும், இயற்கை தாமே உயிர்த்தெழுதல் உண்டு என்பதை நிரூபிக்கிறது. செத்த மரம் எப்படி மறுபடியும் துளிர்க்கிறது என்ற உண்மை, இயற்கை சக்திகளைக் காட்டிலும் பெரிய வல்லமை உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆகவே அப்படிப்பட்ட வல்லமையுள்ள தேவன், மனிதன் மண்ணிலே சதாகாலங்களிலும் இருக்க விட்டுவிடுவாரா?

மனிதனுடைய தன்மையும், உயிர்த்தெழுதலை சாத்தியமாக்குகிறது. யோபு, கல்லறையிலே அமைதி காண விழைந்தாலும், சதா காலமும் அங்கு இருக்க பிரியமில்லை. அங்கு புழுதியோடு ஒன்றுமில்லாமல் போவதற்கு அவனுக்கு ஆசை இல்லை. தேவன் தன்னை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். திரும்ப அவரால் அழைக்கப்பட வேண்டும் என்று எண்ணினான் [14 : 13]. மனிதன் செத்தபின் உயிர்த்தெழுவது முடியாது என்றால், உண்மையிலே நாமெல்லோரும் மிகவும் துர்ப்பாக்கியசாலிகளாகத்தான் இருக்கவேண்டும். இந்த உலகத்தோடு எல்லாமே முடிந்து விடுவது என்றால், நமக்கு இவ்வுலகில் மிஞ்சுவது எல்லாம் வருத்தம், பாரம், பசி, பட்டினி, வியாதியுமே. பவுல் கூறுவதைப்போல "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" [1 கொரி. 15 : 19].

இங்கு ஏழையைச் சுரண்டி, அவர்கள் ரத்தத்தைப் பிழிந்து, பணக்காரன் வாழ்கிறான். ஒருவன் மாடியிலே, இன்னொருவன் குடிசையிலே. சாதிப்பிரச்சனை. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு. ஏற்றத் தாழ்வுகள். இதற்கிடையில் மனிதனுக்குத்தான் எத்தனை பிரச்சனைகள்! கவலை, விசாரம், துன்பங்கள். இவை எல்லாவற்றிலும், உயிர்த்தெழுதல் உண்டு, மனிதன் செத்தபின் பிழைப்பான், எல்லோரும் நியாயத் தீர்ப்படையப்போகிறார்கள் என்ற உண்மை நம்மை தேற்றுகிறது. மனிதர் கைக்கு நாம் நம்மை தப்புவித்து, ஒளித்து கொண்டாலும், அந்த பெரிய நியாயத்தீர்ப்பு நாளில், நாம் செய்த ஒவ்வொரு கிரியைகளுக்குத் தக்கதாக கணக்கு கொடுப்போம் என்று வேதம் சொல்லுகிறது. "அன்றியும் நாம் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" [எபி. 9 : 27]. உயிர்த்தெழுதலை குறித்து தாவீது, ஏசாயா, தானியேல் போன்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பேசி இருக்கிறார்கள். இருப்பினும் முழுவதுமாக பிரசங்கிக்கப்பட்டது, கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்த பிறகே. "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப் படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழியிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்குங்

காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" [யோவான். 5 : 28, 29].

கிறிஸ்து தாமே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து, நித்திரை அடைந்தவர்களின் முதற்பலனுனுர் [1 கொரி. 15 : 20]. இது யாராலும் மறுக்க முடியாத சரித்திர உண்மை. முதல் நூற்றுண்டில் வாழ்ந்த, ஜோசிபஸ் என்கிற யூத சரித்திர ஆசிரியனும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து திட்டவட்டமாக எழுதி இருக்கிறுர்.

பிரியமானவர்களே, கிறிஸ்து மீண்டும் வரப்போகிறுர். உலகம் ஒரு நாள் முடியப்போகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் மரித்தோமாளுல், அவரோடு உயிர்த்தெழுவோம். கிறிஸ்துவின் சித்தத்திற்கு இவ்வுலகில் கீழ்படிந்திருந்தால், இவ்வுலகப் பிரச்சினைகளால் ஒன்றும் விழுங்கப்பட மாட்டோம். செத்தபின், அவர் வருகையிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, என்றும் அவரோடு தங்கி இருக்கும் பாக்கியத்தை அடைவோம்.

---

பாடம் 11

# தேவனுடைய ஞானம்

யோபுவை குழப்பத்திலாழ்த்திய சில கேள்விகளை, போன பாடத்திலே படித்தோம். தொடர்ந்து இன்னும் சில கேள்விகளைப் பார்ப்போம்.

ஆனாலும் ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே? புத்தி விளைகிற இடம் எங்கே [யோபு. 28 : 12].

நம்மைப்போலவே யோபுவும், ஞானத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டான். சுவாரஸ்யமாக அதைக் குறித்து தர்க்கம் பண்ணி, முடிவை நமக்கு சொல்லுகிறான். இன்று உலகத்தில் ஞானத்தைக் குறித்து பலர், பலவிதமாக கூறுகின்றனர். ஞானி யார்? ஞானத்திற்கு வரையறை உண்டா? என்பதைக்குறித்து வித்தியாசமான கொள்கைகளை மக்கள் மத்தியில் நாம் கேட்கிறோம்.

மனிதன், ஞானத்தின் ஆரம்பத்தை அறிதல் வேண்டும். அதையும், இருக்கும் இடத்தில் தேடி கண்டடைய வேண்டும். மனிதனுக்கு, பொன், வெள்ளி, இரும்பு, பித்தளை போன்ற உலோகங்களை எங்கு கண்டுபிடிக்கலாம் என்று தெரிந்திருக்கிறது என்பதை, யோபு அறிந்திருந்தார் [யோபு. 28 : 1,2]. ஆகாரம் பூமியின் மேல் விளையும் என்பதையும் அறிவார் [யோபு. 28 : 5].

ஆனால் ஞானத்தை எங்கே கண்டடைவது? அது மனிதனிடத்தில் இருந்து தோன்றவில்லை [யோபு. 28 : 21]. அதைத் தங்கம், வெள்ளியால் வாங்க முடியாது [யோபு, 28 : 15]. ஒரு கடைக்கோ அல்லது கலாசாலைக்கோ சென்று வாங்க முடியாது. மேலும் அதன் மதிப்பை பார்க்கும்போது, ஓப்பீரின் தங்கமும், விலையேறப்பெற்ற கோமேதகமும், இந்திர நீலக்கல்லும் அதற்கு ஈடல்ல. பொன்னும், பளிங்கும் அதற்கு ஒப்பல்ல. பசும் பொன்னாபரணங்களுக்கு அதை மாற்றக் கூடாது. பவளத்தையும் ஸ்படிகத்தையும் அத்தோடே ஒப்பிட்டுப் பேசலாகாது. முத்துக்களைப் பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது. எத்தியோப்பியாவின் புஷ்பராகம் அதற்கு நிகரல்ல. பசும்பொன்னும் அதற்கு சரியல்ல [யோபு. 28 : 16–19]. இன்னும் சொல்லப் போனால் கோஹினூர் வைரமும் அதற்கு ஈடாகாது.

பின்பு ஞானம் எங்கேயிருந்து வரும்? அந்த இடத்தை தேவன் ஒருவரே அறிவார். அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும் [யோபு. 28 : 23]. அவருடைய மறைபொருள் மாத்திரமே ஞானத்தின் ஆரம்பம். ஆகவேதான் மனிதன் அதன் ஆரம்பத்திற்கு செல்ல வேண்டும். எவ்வாறு? இயற்கையை படிப்பதன் மூலமா? தேவனுடைய ஞானம் இயற்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், அது ஒன்றே ஞானமாகாது. அதற்கு அப்பாலே பார்க்க வேண்டும். தேவனால்

வெளிப்படுத்தப்பட்ட ஞானம் அவருடைய வார்த்தையில் உள்ளது. யோபு முடிவாக தீர்மானித்துக் கூறியது, "இதோ ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம். பொல்லாப்பை விட்டுவிலகுவதே புத்தி என்றார் [யோபு, 28 : 28]. அந்த தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய வார்த்தை இல்லாமல், மனிதன் தேவனின் சித்தத்தை அறியவும் முடியாது அல்லது தீமையை விட்டு விலகுவது எவ்வாறு என்றும் தெரிந்து கொள்ளவும் முடியாது.

நேர்மையுள்ள எந்த அறிவாளியும் இதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். உண்மையான ஞானிகள், தாழ்மையோடிருப்பார்கள். இன்னும் கற்க வேண்டியவைகள் இருக்கிறது என்று உணர்வார்கள். எல்லாவற்றையும் அறிந்து இருக்கிறேன் என்று கூறிக்கொண்டு செருக்கால், இறுமாப்புடன் செல்லும் அகங்காரி ஒரு உண்மையான ஞானி அல்ல. வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளடங்கியது. மனிதனுடைய எல்லா தேவைகளையும் வேதாகமம் பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்கிறது. மத சம்பந்தப்பட்ட எந்த கேள்விகளுக்கும் விடைகாணலாம்.

தேவன் இவ்வுலகில் பரிபூரண ஜீவியத்திற்கான யாவற்றையும் கொடுத்திருக்கிறார் [யோவான் 10 : 10]. அவருடைய வசனமே சத்தியம் [யோவான் 17 : 17]. ஆத்துமா சம்பந்தப்பட்ட எல்லா ஞானமும் அதில் அடங்கி இருக்கிறது. அதில் மனித அறிவுக்கப்பாற்பட்ட தெளிந்த தத்துவங்களும் உண்டு. இதற்கு இணையான புத்தகம் உலகில் கிடையாது. எந்த மனிதனும் வெகு எளிதில் புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. சாதாரண மனிதனை ஞானியாக்கும் வல்லமை வேதாகமத்திற்கு உண்டு. தாவீது கூறுகிறார், "போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனுக்கும், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனுகச் செய்யும்" [சங். 119 : 99, 100].

**யோபுவை குழப்பிய அடுத்த கேள்விக்கு வருவோம்.**

நான் ஒரு தடவை, ஒரு சகோதரனிடத்தில் சென்று, அவனை சபைக்கு வருமாறு அழைத்தபோது அவன் கூறிய மறுமொழி என்னை திடுக்கிடவைத்தது. நான் சபைக்கு வந்து என்ன, வேதாகமம் படித்தென்ன, தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜீவித்தென்ன லாபம்? அடுத்த வீட்டுக்காரர்களைப் பாருங்கள். அவர்கள் எந்த சபைக்கும், கோவிலுக்கும் செல்லுவது கிடையாது. சினிமா, பாட்டுக் கச்சேரி, நாடகம் என்று சென்று, நாட்களை இன்பமாக கழிக்கின்றனர். பார்த்தால் அவர்களுக்கு ஒரு கஷ்டமும் காணும். நன்றாக இருக்கிறார்கள். பணக்காரர்களாகவுமிருக்கிறார்கள்.

நான் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜீவித்து என்ன சுகம்? வறுமையும், பட்டினியும், கஷ்டங்கள்தான் மிஞ்சியது. ஆமாம், உங்கள் தேவன் செய்வது நியாயமா? என்று கேட்டான். இப்படித்தான் யோபுவும் அந்நாட்களிலே சிந்தித்திருப்பான். துன்பங்கள், அவன் பாவத்தை செய்துக் கொண்டிருக்கும்

வேளையில் வந்திருந்தால் பரவாயில்லை. ஆனால் தேவனுக்கு ஊழியம் செய்யும் அந்த வேளையில் வந்தபோது, அது அவனை ஒரு கலக்கு கலக்கியது. உண்மையிலே மனிதர்கள் விஷயத்தில் தேவன் செய்வது நியாயம்தானா என்று சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு யோபு வந்திருந்தான். அப்படி அவனை சிந்திக்க வைத்த கேள்வி?

## துன்மார்க்கர் வல்லவராவானேன்?

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவர் வாயிலிருந்தும் வரும் கேள்வி இது. நீதிமான்கள் கேட்கிறார்கள், பாவிகள் மட்டும் ஏன் நிரம்ப ஆசீர்வாதத்தை பெற்று இவ்வுலகில் நன்றாக இருக்கிறார்கள்? தன் துன்பங்களுக்கு எதிரிடையாக துன்மார்க்கர்கள் சுக ஜீவிகளாக இருப்பதைக்கண்டு யோபுவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "துன்மார்க்கர் ஜீவித்து விருத்தராகி, வல்லவராவானேன்? என்று கேட்டான் [யோபு. 21 : 7].

## பாவிகள் விருத்தியடைய தேவன் ஏன் அனுமதிக்கிறார்?

எல்லா விடைகளையும் நம்மால் அறிய முடியாவிட்டாலும், சில அடிப்படை கொள்கைகளை அறிந்து கொள்ளலாம்.

முதலாவது, துன்மார்க்கன் வல்லவராவது வருங்காலத்தில் நியாயத்தீர்ப்பு வேண்டுமென்கிற அவசியத்தை உறுதிப்படுத்துகிறது. இப்படி நீதிமான் ஒடுக்கப்பட்டு கொடுமை செய்கிறவர்கள் தண்டனையடையாமல் தப்பித்துகொள்வது, தேவன் அநீதிக்காரர் என்பதால் அல்ல. ஒருநாள் சரியான கணக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்கிறது. யோபு முடிவில் கூறியது, "துன்மார்க்கன் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்படுகிறான்" [யோபு. 21 : 30]. இந்தக்கேள்விக்கான விடைக்கு இந்த உலகத்திற்கு அப்பால் பார்க்க வேண்டும். "இவ்வுலகத்திலேயே எல்லாம்" என்ற தத்துவத்தை வைத்துக்கொண்டு, மனித பிரச்சினைகளுக்கு விடை காண முயற்சி செய்பவர்கள் எத்தனை கஷ்டங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இரண்டாவது, துன்மார்க்கனாயிருந்தாலும், தேவன் நம் பிரயோஜனத்திற்காக கொடுத்திருக்கும் இயற்கை சட்டத்தை அனுசரித்து நடந்தால் அவன் நன்றாக இருக்கலாம். நீதிமான் என்ற காரணத்தால், அந்த இயற்கை நியதியை மீறும்பொழுது அதன் பிரதி பலனை அனுபவிக்கத்தான் வேண்டும். தேவன் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதி உள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார் [மத். 5 : 45]. தேவனுடைய இயற்கை சட்டங்களைப்போலவே, அவருடைய ஆவிக்குரிய பிரமாணத்தை கீழ்படிகிறவன் அதன் பலனை அனுபவிப்பான்.

மூன்றாவது, துன்மார்க்கர் விருத்தியடைவது அவர்கள் மனந்திரும்புவார்கள் என்று தேவன் பொறுமையோடு காத்திருப்பதைக்

காட்டுகிறது [ரோம. 2 : 4]. அந்த பொல்லாதவன் உன் தகப்பனுகவோ, தாயாகவோ, பிள்ளையாகவோ இருந்தால் தேவனே உடனே அவர்களை அழித்து விடு என்பாயா! அல்லது பொறுமையோடிருக்க எதிர்பார்ப்பாயா!

நான்காவது, துன்மார்க்கர் விருத்தியடைவது, நீதிமானுக்கு ஒரு விசுவாச சோதனை. சுகங்களை அனுபவிப்பது தேவனுடைய அங்கீகாரம் அல்ல என்று யோபு முடிவுக்கு வந்தான். "கள்ளருடைய கூடாரங்களில் செல்வமுண்டு. அவர்கள் கையிலே தேவன் கொண்டுவந்து கொடுக்கிறார்" [யோபு. 12 : 6]. ஆகவே கஷ்டம் பாவத்தினால் மாத்திரம் வரும் என்ற தன்னுடைய நண்பர்களின் தத்துவத்தை யோபு நிராகரித்தான் [யோபு. 21 : 34]. தேவனுக்கு முன் ஒருவன் உத்தமனா இல்லையா என்பதை, உலக ஆஸ்திகளை வைத்துக்கொண்டு கூற இயலாது. துன்மார்க்கருடைய சுபிட்சம், நீதிமானின் விசுவாசத்தை சோதிக்கிறது என்பதால் தான் தேவன் எச்சரிப்பது, "பொல்லாதவர்களை குறித்து எரிச்சலடையாதே. நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே" [சங். 37 : 1 ]. துன்மார்க்கர்களுக்கு என்ன வைக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் முடிவு என்ன என்று அறிந்து கொள்வோமேயானால், அவர்கள் இவ்வுலகத்தில் எவ்வளவு வசதியுடன் சுகமாக ஜீவித்தாலும் அவர்களைக் குறித்து எரிச்சலடையமாட்டோம்.

---

பாடம் 12

# துன்மார்க்கர்மேல் பொறுமை கொள்ளாதே

கடந்த பாடத்தில் "துன்மார்க்கர் இவ்வுலகத்தில் ஏன் சுகமாக இருக்கின்றனர்?" என்பதைப்பற்றி படித்தோம். "அவர்களைக்கண்டு எரிச்சலடையாதே" என்ற தேவனுடைய எச்சரிக்கையும் கவனித்தோம். பாவிகளுடைய சந்தோஷத்தையும், வெற்றியையும் கண்டு ஏன் நாம் பொறுமை கொள்ளக்கூடாது என்பதற்கு யோபு கூறும் காரணங்களை இப்பொழுது நோக்குவோம்.

1. துன்மார்க்கனின் சந்தோஷம் அற்பமானது. சடிதியில் மறைந்து விடக்கூடியது. "அவர்கள் காற்று முகத்திலிருக்கிற துரும்பைப் போலவும், பெருங்காற்று பறக்கடிக்கிற பதரைப்போலவும் இருக்கிறார்கள்" [யோபு 21 : 18]. அவர்கள் கொஞ்சக்காலம் உயர்ந்திருந்து காணுமற்போய், தாழ்த்தப்பட்டு, மற்ற எல்லோரைப்போலவும் அடக்கப்படுகிறார்கள். கதிர்களின் நுனியைப்போல அறுக்கப்படுகிறார்கள் [யோபு. 24 : 24].

2. அவர்களுக்கு இம்மையில் துன்பம் வரும். அப்போது அவர்களுடைய சொத்து சுகங்கள், அவர்களுடைய ஆத்துமாவை போஷிக்கவோ தேற்றவோ செய்யாது. அவர்களுக்கு தேவனுடைய உதவிதான் தேவைப்படும். ஆனால் அதைப் பெறவும் இயலாது. காரணம் "மாயக்காரன் பொருளைத் தேடி வைத்திருந்தாலும், தேவன் அவன் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்போது அவன் நம்பிக்கை என்ன? ஆபத்து அவன்மேல் வரும்போது, தேவன் அவன் கூப்பிடுதலைக் கேட்பாரோ? அவன் சர்வ வல்லவர்மேல் மன மகிழ்ச்சியாயிருப்பானோ? [யோபு. 27 : 8–10]. "பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்கு சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார் [யோவான். 9 : 31].

3. அவர்கள் இன்பம் தற்காலிகமானது. ஏனெனில் "வெள்ளத்தைப்போல திகில்கள் அவனை வாரிக்கொண்டு போகும்" [யோபு. 27 : 20]. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர் [சங். 73 : 18,19].

4. தீமை செய்கிறவர்களுக்கு நித்திய தண்டனை காத்திருக்கிறது. "துன்மார்க்கன் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்படுகிறான்" [யோபு. 21 : 30].

கிறிஸ்துவும், "அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் [மத். 25 : 46]. இதையுணர்ந்த யோபு கூறுகிறார், "என் நீதியை கெட்டியாய் பிடித்திருக்கிறேன். அதை நான் விட்டுவிடேன். நான் உயிரோடிருக்குமளவும் என் இதயம் என்னை நிந்திக்காது" [யோபு. 27 : 6].

ஆகையினால், "நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே". எவ்வளவுதான் பணமும், புகழும் அவர்களிடத்தில் இருந்தாலும், பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே. நித்தியத்தில் களிக்கும் சந்தோஷத்தை ஒப்பிட்டு பார்க்கிறபோது, தற்காலிக இப்பூலோக மேன்மைகள் எவ்வளவு பிரயோஜனமற்றது என்று காண்கிறோம். சங்கீதக்காரன் தாவீது கூறுகிறார், "கர்த்தரை நம்பி நன்மை செய். தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து அவருக்குக் காத்திரு. காரியசித்தி உள்ளவன் மேலும், தீவினைகளைச் செய்கிற மனுஷன் மேலும் எரிச்சலாகாதே. கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு. பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் [சங். 37 : 3–11].

"இவை எல்லாவற்றிலும், யோபு பாவஞ் செய்யவுமில்லை. தேவனைப்பற்றி குறை சொல்லவுமில்லை" [யோபு. 1 : 22]. சிலர், தேவன் செய்வது நியாயம் அல்ல என்று தேவனைப்பற்றி குறை கூறிக்கொண்டு அவருக்கு எதிராக கலகம் செய்கிறார்கள். துன்மார்க்கனுடைய சுபீட்சத்தைப் பார்த்து பொறாமைப் படுவதோடு மாத்திரம் அல்லாமல், வேறு சில காரணங்களின் நிமித்தமாகவும் அப்படி செய்கிறார்கள்.

முதலாவது, திரளான ஜனங்கள் அழிக்கப்பட்டதைப் பார்த்து தேவன் செய்வது நியாயம் அல்ல என்கிறார்கள். உதாரணமாக சோதோம் கொமோரா பட்டணங்கள் அழிக்கப்பட்டபோது, குற்றம் செய்தவர்களோடு நிரபராதிகளும் ஏன் அழிக்கப்பட வேண்டும் என்கிறார்கள் [ஆதி 19 : 24, 25]. தேவன் நித்தியத்தை நோக்கத்தில் வைத்து செயல்படுகிறார். ஆனால் மனிதன் இந்த வாழ்க்கை, உலகத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறான். யுத்தங்களிலும் சம்பந்தப்படாத அநேக குற்றமற்றவர்கள் கொல்லப்படுகின்றனர். இன்னும் இயற்கை விபத்துகளிலும் பல்லாயிரக்கணக்கானபேர் அழிக்கப்படுகின்றனர். மேற்கூறிய உதாரணங்களில், மூன்று தரப்பட்ட மக்கள் மடிகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

ஒன்று, பொல்லாதவர்கள் : அவர்கள் அழிக்கப்படுவது சரியே என்று நம்முடைய நீதி அனுமதிக்கிறது .

இரண்டாவது, நீதிமான்கள் மடிகிறார்கள் : இந்த உலகத்தைவிட்டு, பரலோகத்திற்கு செல்வது அவர்களுக்கு நல்லதா? கெட்டதா? என்று யோசித்துப் பாருங்கள். பவுல், "எப்பொழுது இந்த தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருப்பேன் என்று ஆசையாய் இருந்திருக்கிறார்" [பிலி. 1 : 23]. ஆகவே இவர்களுக்கு மரணம் ஒரு அநீதியான காரியம் அல்ல.

மூன்றாவது, குற்றமற்ற குழந்தைகளும், சிறு பிள்ளைகளும் பொல்லாங்கு நிறைந்த இந்த உலகத்தில் ஆத்துமாவை கறைபடுத்தக்கூடிய அபாயத்திலிருந்து அவர்களை பரலோகத்திற்கு எடுத்து செல்வதில், தேவன் நல்லது செய்கிறாரா, கெட்டது செய்கிறாரா கூறுங்கள்.

சிலர், மனிதனுடைய பாவங்களினிமித்தம் தேவன் செய்வது நியாயமற்ற காரியம் என்று குறை கூறுகின்றனர். யுத்தங்கள் வருகிறது. காரணம் மனிதனுடைய பாவங்கள். யாரோ ஒருவர் தவறு இழைத்திருக்க வேண்டும். இல்லாவிடில் ஏன் சண்டை, சச்சரவு, யுத்தம், துக்கம். வருத்தத்தின் மிகுதியால், தேவன் ஏன் இவற்றை அனுமதித்தார், அவர் நியாயமற்றவர் என்று கத்துகிறோம். வெயிலின் கொடுமையினால், தன் பிள்ளையை இழந்து விட்டுத் தவிக்கும் ஒரு தாய் கூறியது, "என்ன கொடுமை, தேவன் ஏன் இந்த வெயிலைத் தரவேண்டும், என் பிள்ளையை சாகடிக்கவேண்டும்?'.

அவர் செய்தது நியாயமல்ல என்றாள். வெயிலில்லாமல் முதலாவது நாம் எப்படி உயிரோடிருக்கமுடியும். மனுஷனுடைய பாவங்களுக்கு நாம் தேவனை குறை கூறுவதில் அர்த்தமில்லை. சிலர், யாரேனும் அன்புக்கு பாத்திரமானவர் இறந்துவிட்டால், தேவனை குறை கூறுவர். இந்த மரணத்தை தேவன் தன் பிள்ளைகளை ஆசிர்வதிக்க கொடுத்திருக்கிறாரே தவிர மற்றபடி தீங்கு செய்ய அல்ல.

இந்த சரீரம் பரலோக ஜீவியத்திற்கு ஏற்றதல்ல [1 கொரி 15 : 50]. இந்த மரணம் என்ற பாலத்தை கடந்துதான் நித்தியம் என்ற கரைகாண முடியும். அங்குதான், "தேவன் அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை" [வெளி 21 : 4]. ஆகவேதான் பவுலும், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்றார் [பிலி. 1 : 21]. கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம், அவர் பார்வைக்கு அருமையானது [சங். 116 : 15].

இன்னும் சிலர் சரீரபிரகாரமான அங்கஹீனர்களாக இருப்பவர்களைப் பார்த்து, தேவனை குறை கூற ஆரம்பிக்கின்றனர். ஏன் ஒருவன் குருடனாகவும், சப்பாணி, ஊமையாகவும் பிறக்கவேண்டும்? பார்வைக்கு நம் கண்ணோட்டத்தில் இது நியாயமற்றதாக தோன்றலாம். ஆனால் தேவனுடைய இரக்கமற்ற செயலினால்தான் இது நேர்ந்தது என்று யாரும் நிரூபிக்கமுடியாது. காரணம் எது உண்மையில் நல்லது, எது கெட்டது, எது ஆசீர்வாதம், எது சாபம் என்று நாம் யாரும் திட்டமாக கூறமுடியாது. வேண்டுமானால், இப்படி வைத்துக்

கொள்ளலாம். தேவனிடத்தில் நம்மை நெருங்கி ஜீவிக்க உதவும் எல்லாமே ஆசீர்வாதங்கள்தான். எது நம்மை தேவனிடத்தில் இருந்து பிரிக்க வைக்கிறதோ அவை எல்லாம் சாபங்கள்தான். நமக்கு சாபமாகத்தெரியும் காரியங்கள் உண்மையிலே ஆசீர்வாதமாகவே இருப்பதை பின்பு நாமே ஒத்துக்கொள்ளுகிறோம்.

சில ஆண்டுகளுக்கு பின்பு ஒரு ஊரில் ஒரு ஏழை தொழிலாளிக்கு லாட்டரி சீட்டில் அவர் பெயருக்கு ரூ. 1 லட்சம் கிடைத்தது. அதை ஆசீர்வாதமாகத்தான் எண்ணி இருந்தார். அதை பிரித்து மனைவிக்கு ரூ. 50,000 கொடுத்திருந்தார். புதுப் பணக்காரர்கள், சாத்தானால் சோதிக்கப்பட்டனர். கணவன் குடிப்பதிலும், சூதாடுவதிலும், விபச்சாரத்திலும் 50 ஆயிரத்தை செலவழித்துக்கொண்டிருந்தான். மனைவி பார்த்தாள், ஏதேது அதை காலி செய்து விட்டு பின்பு நம்முடைய பாகத்தையும் பிடுங்கி விட்டால் என்ன செய்வது என்று பயந்து அந்த 50 ஆயிரத்தை எடுத்துக்கொண்டு தன் காதலனுடன் வேறு ஊருக்கு ஓடிவிட்டாள். கணவனும் எல்லா பணத்தையும் ஊதாரித்தனமாக செலவழித்துவிட்டு, மறுபடியும் "பழைய குருடி, கதவைத் திறடி" என்பதற்கொப்ப தொழிலாளியானான்.

இப்பொழுது கூறுங்கள், அந்த பணம் அவர்களுக்கு ஆசீர்வாதமா? சாபமா? எத்தனையோ குருடர்கள், அங்கஹீனர்கள், தங்கள் குறைகளின் மத்தியில் உலகத்திற்கு எத்தனையோ காரியங்களை கொடுத்திருக்கின்றனர். அவர்களுக்கு அந்த குறைகள் உண்மையிலே ஆசீர்வாதமாக அமையவில்லையா? பவுல் கூறுகிறார், "நான் பலவீனமாயிருக்கும் போதே, பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்று [2 கொரி. 12 : 10].

---

பாடம் 13

# எலிகூவின் தூக்கம்

கடந்த பாடத்தில் துன்மார்க்கர்களை கண்டு எரிச்சலடையக் கூடாது என்பதற்கு யோபு கூறும் காரணங்களைப் படித்தோம். இந்தப் பாடத்தில் எலிகூ என்ற இளைஞன் கூறுவதைப்பற்றி படிப்போம்.

யோபுவும், அவனது மூன்று நண்பர்களும் பேசிய உரையாடலைக் கேட்ட பின்னர் எலிகூ தன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தலானான். முதலில் இதுவரைக்கும் தான் ஏன் பேசாமலிருந்தான் என்பதற்கு காரணம் கூறுகிறான். "நான் இளவயதுள்ளவன், நீங்களோ விருத்தாப்பியர். ஆகையால் நான் அஞ்சி என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்த பயந்திருந்தேன். முதியோர் பேசட்டும், வயது சென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும் என்றிருந்தேன்" என்றான் [யோபு. 32 : 6, 7].

அந்தப்படி ஒரு இளைஞன் வயதையும், ஞானத்தையும் மதித்து இன்னும் கற்று கொள்ள வேண்டிய நிலையிலிருப்பதை உணர வேண்டும். மௌனமாய் இருப்பதற்கு ஒரு காலமுண்டு, பேசுவதற்கும் ஒரு காலமுண்டு [பிரச. 3 : 7]. சில வேளைகளில் மௌனம் நல்லது. ஆனால் பேசவேண்டிய சமயங்களில் மௌனமாயிருப்பது கோழைத்தனம். இவ்வளவு நேரமும் மௌனமாயிருந்து விட்டு, இப்பொழுது உள்ள உறைப்பினால் எலிகூ பேசத்தொடங்கினான். மனுஷன் முகத்தைப்பார்த்து இச்சகம் பேசுவதோ, உண்மை என்று தெரிந்தும் பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பதோ தவறு. இங்கு எலிகூ, யோபின் நண்பர்கள் அந்நாளைய பிரபல்யமானவர்கள் என்பதால் பயந்து பேசாமல் இருக்க வில்லை. தைரியமாக, "நான் உங்கள் சொல்லைக் கவனித்தேன். ஆனாலும் இதோ, உங்களில் யோபுக்கு நியாயத்தைத் தெரியக்காட்டி அவருடைய வசனங்களுக்கு ஏற்ற பிரதியுத்தரம் சொல்லுகிறவனில்லை" என்றான் [யோபு, 32 : 12].

யோபுவும் கூட சில காரியங்களில், இன்னும் தெளிவான அறிவுரையைப் பெறவேண்டியவனாக இருப்பதை எலிகூ உணர்ந்தான். அவர்கள் பேச்சைக் கேட்டு எலிகூ எடுத்த முடிவு, "பெரியோரெல்லாம் ஞானிகளல்ல. முதியோரெல்லாம் நீதியை அறிந்தவர்களுமல்ல" [யோபு. 32 : 9]. எப்பொழுதும், வயதும் அனுபவமும் தான் ஞானத்தைக்கொண்டு வரும் என்று கூற முடியாது. இளைஞனோ, முதியவனோ ஞானமுடையவனாக மாறத்தக்க பக்குவம் மனிதனுக்கு உண்டு.

## அப்படியானால் உண்மையில் யார்தான் ஞானி?

"கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" [நீதி. 1 : 7]. எவன்

ஒருவன் தேவனுடைய வார்த்தையை கேட்டு அதன்படி நடக்கிறானோ, அவனே ஞானி. அவன் இளைஞனானாலும் சரி, முதியவனானாலும் சரி. ஆகவே எலிகூ தைரியமாக தன் உள்ளத்திலிருக்கும் உண்மையை கூறுகின்றான். யோபுவும் அவனது மூன்று நண்பர்களும் அதிகமாக தர்க்கம் பண்ணின காரியம், நீதிமான்கள் மீதும் துன்மார்க்கர் மீதும் தேவன் எப்படி நியாயத்தைக் கொண்டு வருகிறார், எப்படிப்பட்ட நீதியோடு அவர்களை விசாரிக்கிறார் என்பதே. அதை அடிப்படையாகக்கொண்டு எலிகூ தன் பேச்சை துவங்குகிறான்.

தேவன் உன்னதமானவர். அவர் தாம் செய்யும் காரியங்களுக்கு நமக்குக் காரணம் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இல்லை. நாம் தேவனுடைய உள்ளத்தின் ஆழத்தை அறிய முடியாது. அது ஒரு சமுத்திரத்தை எப்படி நம் உள்ளங்கையால் தாங்கக் கூடாதோ அதைப்போல. ஒரு மிருகம் மனிதனுடைய உள்ளத்தை புரிந்துக்கொள்ளமுடியாது. ஒரு சிறு குழந்தையும், தன் பெற்றோர்கள் கட்டளை கொடுக்கும்போது அதிலுள்ள ஞானத்தை புரிந்துகொள்ளமுடியாது. ஆகவே எலிகூ கூறினான், "மனுஷனைப் பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார்.

அவர் தம்முடைய செயல்கள் எல்லாவற்றையும் குறித்து காரணம் சொல்லவில்லை என்று நீர் அவரோடு ஏன் வழக்காடுகிறீர்? தேவன் ஒரு விசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருத்துகிறவர ல்லவே" [யோபு. 33 : 12–14]. தேவன் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றும் நீதியானவைகள். நமக்கு ஒன்றும் புத்திக்கு எட்டவில்லை என்ற காரணத்தால் அவரை குற்றஞ்சாட்ட முடியுமா! "அவர் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாக திருப்பினாரானால் அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளுவார். அப்படியே மாம்சமான யாவும் ஏகமாய் ஜீவித்துப்போம், மனுஷன் தூளுக்கு திரும்புவான்" [யோபு. 34 : 14, 15].

சில சமயங்களில் மனிதன் தண்டிக்கப்படுகிறான். ஆனால் அவை மனிதனுடைய நலனுக்காக, அவனை ஒழுங்குபடுத்துவதற்கே என்றான் எலிகூ [யோபு. 33 : 17–30]. பின்னும் எலிகூ, "தேவன்மகா நீதிபரர்" என்றான் [யோபு. 34 : 17]. ஆகவே அவர் மனிதனுக்கு அநீதி இழைக்கவே மாட்டார். தேவ நீதி என்ன கேட்கிறது, பாவம் தண்டிக்கப்பட வேண்டும். இந்த தெய்வீக தண்டனையிலிருந்து தீமை செய்கிறவர்கள் தப்பித்துகொள்ள இருளும் உதவமுடியாது, மரணமும் துணைபுரியாது [யோபு. 34 : 21–29]. துன்மார்க்கரை தண்டித்து, நீதிமானை தேவன் தேற்றுவார் என்று விசுவாசிக்க வேண்டும்.

பின்னும் எலிகூ கூறினான், "இதோ, தேவன் மகத்துவமுள்ளவர். அவர் ஒருவரையும் புறக்கணியார், மன உருக்கத்திலும் அவர் மகத்துவமுள்ளவர், அவர் துன்மார்க்கரைப் பிழைக்க ஒட்டாதிருக்கிறார். சிறுமையானவர்களின்

நியாயத்தை விசாரிக்கிறார். அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல் அவர்களை ராஜாக்களோடே கூடச் சிங்காசனத்தில் ஏற்றவும், உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார்" [யோபு. 36 : 5–7].

மனிதனைப் பொறுத்த மட்டில், தேவன் நீதியுள்ளவராகவே இருக்கிறார். வேறு எப்படியும் அந்த மகத்துவமுள்ளவர் இருக்கமுடியாதே. ஆகவே நமக்கு அநீதி இழைக்கப்பட்டதைப்போல், நியாயம் இல்லாததைப்போல் காரியங்கள் நடை பெறுவதைப்பார்த்து, நாம் அஞ்சி கலக்கமடைய வேண்டியதில்லை. தேவன் எப்பொழுதும் மனிதனுக்கு நியாயத்தையே செய்கிறவராக இருக்கிறார். "தேவன் அநியாயஞ் செய்யாமலும், சர்வ வல்லவர் நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே" என்றான் எலிகூ [யோபு. 34 : 12].

அடுத்தபடியாக, **மனிதனிடத்தில் கீழ்படிதலை தேவன் எதிர்பார்ப்பது நியாயமா என்ற கேள்விக்கு விடை காணுவோம்.**

யோபு, "நான் பாவியாயிராததினால் எனக்குப் பிரயோஜனமென்ன? பலன் என்ன?" என்று கேட்டான் [யோபு. 35 : 3]. தேவனுக்கு கீழ்படிந்தால் என்ன? அதனால் ஏதேனும் கிடைக்கிறதா, பிரயோஜனமுண்டா?. சில வேளைகளில் மனிதர் தாங்கள் செய்யும் எல்லா நல்ல காரியங்களுக்கும் தேவனிடத்திலிருந்து பாராட்டை எதிர்பார்க்கின்றனர். எலிகூ இதை நன்றாக தர்க்கம் பண்ணுகிறான். மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பது தேவனுடைய நன்மைக்காக அல்ல. "நீர் பாவஞ் செய்தால் அதினாலே அவருக்கு என்ன நஷ்டம்? உம்முடைய மீறுதல்கள் மிகுதியானாலும் அதினாலே அவருக்கு என்ன சேதம்? நீர் நீதிமானாயிருந்தால் அதினாலே அவருக்கு என்ன கிடைக்கும்? அல்லது அவர் உம்முடைய கையில் என்ன லாபத்தைப் பெறுவார்? [யோபு. 35 : 6, 7].

அப்படியானால், நாம் நீதிமான்களாக ஜீவிக்கவேண்டியது, நம்முடைய சொந்த பிரயோஜனத்திற்கே. "எனக்கு விரோதமாய் பாவஞ் செய்கிறவனோ, தன் ஆத்துமாவை சேதப்படுத்துகிறான் [நீதி. 8 : 36]. தேவன் எப்படிப்பட்ட நீதிபரர் என்று நாம் இயற்கையைப் பார்த்தால் அறிந்துகொள்ளலாம். எலிகூ, "யோபே, இதற்குச் செவி கொடும். தனித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளைத் தியானித்து பாரும் [யோபு. 37 : 14] என்றான். மழை, மேகங்கள், மின்னல், இடி போன்ற இயற்கை சக்திகளின் மேல் தேவன் ஒருவரே அதிகாரமுள்ளவராக இருக்கிறார் [யோபு. 36 : 26–37 : 22].

தேவன் மகத்துவமுள்ளவர். தேவனுடைய சிருஷ்டிகளில் ஒன்றையே ஆழமாக புரிந்துகொள்ள இயலாத நேரத்தில், சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனை எப்படி நாம் புரிந்து கொள்ளமுடியும்? இதை உலகத்தத்துவ ஞானிகளும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆகவே எலிகூவின் முடிவும், நம்முடைய முடிவும்

இதுவாகத்தான் இருக்கவேண்டும். அது என்னவெனில், "சர்வ வல்லவரை நாம் கண்டுபிடிக்கக் கூடாது. அவர் வல்லமையிலும், நியாயத்திலும் பெருத்தவர். அவர் மகா நீதிபரர். அவர் ஒடுக்க மாட்டார். ஆகையால் மனுஷர் அவருக்குப்பயப்படவேண்டும். தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்க மாட்டார் [யோபு. 37 : 23, 24].

அந்த உன்னதமானவரை நாம் கண்களினுல் காணமுடியாவிட்டாலும், அவரைப்பற்றி அவருடைய வார்த்தைகளடங்கிய இந்த வேதாகமத்தில் அறிந்துகொள்ளலாம். தேவன் தம்முடைய சித்தத்தை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தி இருக்கிருர். தம்முடைய ஒரே பேரான குமாரன் மூலமாக அதை செயல்படுத்தினுர். "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய், பிதாக்களுக்குத் திருவுளம் பற்றினதேவன் இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினுர்" [எபி. 1 : 1,2]. அந்தக் குமாரனுகிய கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரை தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினுர் [யோவான் 14 : 26]. அந்த பரிசுத்த ஆவியானவர் வரும்போது, "சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப் படுவார்கள் என்ருர்" [யோவான். 16 : 13].

அப்படியே கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்ரும் நாள் உயிர்த்தெழுந்து, 50 நாட்களுக்குப் பின்பு வரும் முதல் பெந்தெகொஸ்தே நாளில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடி, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினுலே நிரப்பப்பட்டனர். சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டு, கிறிஸ்துவின் சத்தியங்களை போதித்தும், தங்கள் நிருபங்களிலும் எழுதியும் இருக்கின்றனர். அதன் தொகுப்பே நாம் காணும் புதிய ஏற்பாடு.

இதில் மனிதனுக்கு தேவையான யாவும் அடங்கி இருக்கின்றன [2 பேதுரு. 1 : 3]. பவுல் கூறுகிருர், "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினுல் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனுகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனுகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" [2 தீமோ. 3 : 16, 17].

---

பாடம் 14

# தேவனுக்கு முன்பாக மனிதன் நீதிமானுயிருப்பது எப்படி?

கடந்த பாடத்தில் எலிகூ கூறிய காரியங்களே படித்தோம். இந்தப் பாடத்தில் **"தேவனுக்கு முன்பாக மனிதன் நீதிமானுயிருப்பது எப்படி"** என்று பார்ப்போம்.

யோபு அப்படி இருக்கக்கூடுமோ என்று ஆச்சரியப்பட்டான் [யோபு. 9 : 2]. யோபின் மூன்று நண்பர்களில் ஒருவனுன பில்தாத்தும், அது முடியாது என்றே எண்ணினுன். அதோடு மனிதன் சுத்தமாயிருக்க முடியாது என்ற தன்னுடைய தத்துவத்தையும் கூறினுன். இப்படியிருக்க மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானுயிருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி? சந்திரனே அண்ணுந்து பாரும். அதுவும் பிரகாசியாமலிருக்கிறது? நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல. புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனு புத்திரனும் எம்மாத்திரம் என்றுன் [25 : 4–6].

மனிதன் பாவமில்லாமல் இருக்க முடியாது. ஆகவே தன் சுய நீதியின் நிமித்தம் மனிதன் பரிசுத்தமாக ஜீவிக்க முடியாது. இருப்பினும் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படத்தக்கவனுக, அவருக்கு முன்பாக நீதிமானுக நடக்கக்கூடும். யோபு நடந்தான். நாமும் நடக்கக் கூடும். நம் நீதி, ஒழுக்க கிரியைகளினிமித்தமாகவும் அல்ல, அல்லது பழைய நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினிமித்தமாகவும் அல்ல [கலா. 2 : 16]. ஆனுல் கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்திருப்பதன் மூலமே. நாம் கிறிஸ்துவின் கட்டளேகளுக்கு கீழ்படிந்து ஜீவிக்கிறபோது அவருடைய ரத்தம் நம்மை தொடர்ந்து சுத்திகரித்து, தேவனுக்கு முன்பாக நீதிமானுகச் செய்கிறது [1 யோவான். 1 : 7–9]. அறிவில்லாத வார்த்தைகளே வசனித்ததாக இரண்டு முறை யோபுவை எலிகூ கடிந்துகொண்டிருக்கிருன் [யோபு 34 : 34, 35 : 16]. அது உண்மையா? தேவனும் அவ்வாறே அவனே கடிந்துகொண்டார் [யோபு 38 : 2]. பின்பு யோபுவே அதை ஒப்புக்கொள்கிருன் [யோபு 42 : 3, 6]. எப்படிப்பட்ட அறிவில்லாத வார்த்தையை பேசினுன் என்று பார்க்கலாம்.

முதலாவது, தெய்வீக நீதியை கேள்வி கேட்டான். தேவனே குறை கூருவிட்டாலும், யோபுவை சுய நீதிக்காரன் என்ற தன் நண்பர்களுடைய குற்றசாட்டை சரியான முறையில் எலிகூ எதிர்த்து நின்றுலும், யோபு, தான் நிரபராதி என்று கூறிக்கொள்வதினுலே, சர்வ வல்லவரின் நியாயத்தை சந்தேகிப்பவனுக இருந்தான்.

ஆகவே தான் தேவன் அவனைப் பார்த்து "நீ என் நியாயத்தை அவமாக்குவாயோ? நீ உன்னை நீதிமானுக்கிக் கொள்ளும்படிக்கு என்மேல் குற்றம் சுமத்துவாயோ?" என்றார் [யோபு. 40 : 8].

இரண்டாவது, கர்த்தர் தனக்கு விரோதியாக மாறினுர் என்ற முடிவுக்கு வந்தான் [யோபு. 10 : 16, 17; 19 : 6–12]. கஷ்டப்படுகிறவனுக்கு, விரோதி ஒருவன் தான் தன்னை அப்படி நடத்தக்கூடும் என்று எண்ணுவான். தன் துன்பங்களின் மத்தியில் அப்படி கூறி தேவனுடைய நியாயத்தை கேள்வி கேட்டவனுக இருந்தான் [யோபு. 33 : 10–12]. ஆனுல் கர்த்தர் விரோதியாயிருக்காமல், அவனுடைய உற்ற நண்பனுக இருந்தார்.

இன்னும் யோபு, தேவன் தம்மை மறைத்து கொண்டார், அவரைக் காணவில்லை என்று எண்ணினுன். "இதோ நான் முன்னுகப் போனுலும் அவர் இல்லை. பின்னுகப் போனுலும் அவரைக் காணேன். இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன். வலதுபுறத்திலும் நான் அவரைக் காணுதபடிக்கு ஒளிந்திருக்கிறுர்" [யோபு. 23 : 8, 9]. பரிதாபம், நொந்துபோன மனிதன் அப்படி கூறிவிட்டான். இது அறிவில்லாத வார்த்தை. ஏனெனில் என்றும் தேவன் அவனேடு கூடவே இருந்திருக்கிறுர்.

நாமும் அப்படியே தாங்க முடியாத கஷ்டங்கள் வந்துவிட்டவுடன், தேவன் நம்மை விட்டு எங்கோ வெகு தூரம் சென்று விட்டதாக எண்ணி விடுகிறோம். இன்ப நேரத்தில் மாத்திரம் தேவன் தங்களோடு இருப்பதாகவும், துன்பம் வரும்போது தேவன் இருப்பதில்லை என்றும் அநேகர் எண்ணுகின்றனர். இதுவும் அறிவில்லாத வார்த்தைதான்.

ஏனெனில் வேதம் போதிக்கிறது, "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டு பிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும், சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறுர்கள்" [அப். 17 : 27, 28]. இந்த சிற்சில காரியங்களிலே யோபு, தவறு செய்திருப்பினும், அவனுடைய மூன்று நண்பர்களான எலிப்பாஸ், பில்தாத், சோப்பாரைக் காட்டிலும் தேவனைப் பற்றிய நிதானமான அறிவு உடையவனுக இருந்தான் [யோபு 42 : 7].

**வார்த்தைகள்** :— உலகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் வார்த்தைகளால் நிரப்பப்பட்டிருக்கின்றன. உலகில் பேசப்படும் பெரும்பான்மையான வார்த்தைகள் அறிவில்லாத வார்த்தைகள் தான் என்று கூறினுல் மிகையாகாது. மனிதன் அடிக்கடி அறிவில்லாத வார்த்தையை வசனிக்கிறவனுக இருக்கிறுன். மதவட்டாரங்களில் எத்தனைவிதமான பேச்சுக்கள். அவைகளில் எவ்வளவு வார்த்தைகள் அறிவில்லாத வார்த்தைகள். சத்தியம் என்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்க முடியாது. ஆனுல்

சத்தியம் என்று மதவட்டாரங்களில் பேசப்படும் வார்த்தைகளில் தான் எத்தனை முரண்பாடுகள், பேதங்கள். அவைகள் ஒன்றுக்கொன்று முன்னுக்குப் பின் முரணாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தேவனுக்கு விரோதமாகவும் இருக்கிறது. யோபுவின் தவறு அதாவது அறிவில்லாமல் வசனித்த காரியங்கள், தேவனை சம்பந்தப்படுத்திய காரியங்கள் என்று அப்புறம் அறிந்து கொண்டான். ஆனால் முன்பு அப்படி எண்ணவில்லை. தேவனை அறிவில்லாமல் குறை கூறும் மக்கள், மற்றும் கள்ளப் போதகர்கள், இவர்கள் விஷயத்தில் எவ்வளவு உண்மை என்று பாருங்கள். "தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள்" [1 தீமோ. 1 : 7]. விஞ்ஞானத்தை பொறுத்த மட்டிலும் இது உண்மையாயிருக்கிறது. விஞ்ஞானிகள் கூட, கடந்த காலங்களில் கூறப்பட்ட எத்தனையோ காரியங்கள் இன்று உண்மை அல்ல என்று ஒத்துக்கொள்கிறார்கள். அவைகள் அறிவில்லாத வார்த்தைகள்தானே. எப்படி இருப்பினும், விஞ்ஞானத்தில் இருக்கும் உண்மை எப்படி மாற்றப்படகூடாதோ, அப்படியே மத விஷயங்களில் மாற்றப்பட முடியாது. நேற்று அது சத்தியமானால், இன்றும் அது சத்தியமாகத்தான் இருக்க முடியும். இந்தக் கொள்கையை நாம் எல்லா அம்சங்களிலும் பயன் படுத்தலாம். மனித வரலாற்று சரித்திரத்தை நோக்கும் பொழுது மனிதன் பேசிய அநேக காரியங்கள் அறிவில்லாத வார்த்தைகளாகக் காண்கிறோம். மனித உறவு சம்பந்தப்பட்ட விஷயத்திலும் இது உண்மை.

மனிதனால் கூறப்பட்டு வந்த அநேக காரியங்கள் அறிவில்லாத வார்த்தைகள். சிறிதும் மாற்றம் இல்லாமல் ஒரே கருத்து மூன்று பேர்களிடையே சொல்ல இயலாது. மற்றவர்களைக் குறித்து சொல்லப்படும் அநேக வார்த்தைகள், இன்று அறிவில்லாத வார்த்தைகளாகவே இருக்கின்றன. அவர்கள் கூறிய வண்ணமாக அநேக காரியங்கள் நடைபெறவில்லை. பாதி உண்மையான காரியத்தை நீங்கள் கேட்டால், ஜாக்கிரதையாக இருக்கவும். ஏனெனில் அந்த பாதி உண்மையும் மாற்றப்பட்ட ஒன்றாக இருக்கும்.

யோபுவின் மூன்று நண்பர்களும் யோபுவைப்பற்றி எத்தனையோ நல்ல காரியங்களை பேசினர். ஆனால் அதோடு சொல்லக்கூடாத ஒரு குற்றச்சாட்டை கூறினர். தாங்கள் என்ன கூறுகிறோம் என்று தங்களுக்கே தெரியாது. அந்த நிலையில்தான் அறிவில்லாத வார்த்தையை பேசினர், நாமும் அன்றாட வாழ்க்கையில் எவ்வளவோ பேசுகிறோம். நாம் சர்வ ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். இல்லாவிடில் நாமும் அறிவில்லாத வார்த்தையினாலே எத்தனையோ நல்ல மனதை புண் படுத்திவிடுவோம். ஆகவே தாவீதைப் போல நாமும் தேவனுடைய கட்டளைகளை கைகொள்ளுகிறவர்களாக இருக்கவேண்டும். தாவீது கூறுகிறார், "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள். என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன்! [சங். 119 : 103, 104].

பாடம் 15

# தேவனுடைய எதிர்க் கேள்விகள்

கடந்த பாடத்தில் மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக இருப்பது எப்படி என்பதையும், அறிவில்லாத வார்த்தைகளை எப்படி எல்லாம் யோபு வசனித்தான் என்பதையும் படித்தோம். இப்பொழுது அந்த கேள்விக்குத் தேவன் கேட்ட எதிர் கேள்விகளை பார்ப்போம்.

நீங்கள் எப்பொழுதாவது ஆகாய விமானத்தில் உயரப்பறந்து கொண்டு இருக்கும் போது, கீழே பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் இருந்திருக்கிறதா? அப்பொழுது இப்பூமியின் பரப்பையும், பெரிய சமுத்திரங்களையும் வானளாவ நிற்கும் மலைகளையும் பார்க்கும் பொழுது, இவற்றை எல்லாம் படைத்து அவற்றை இயக்கி வரும் தேவன் எப்பேர்பட்ட வல்லமையுள்ளவர் என்பதை அறிந்து கொள்ளுவீர். அவர் முன்பாக மனிதன் எவ்வளவு சிறியவன் என்றும் புரிந்து கொள்வீர்.

அப்படியே யோபுவின் கதையின் இறுதிக் கட்டத்தில், இப்பேர்ப்பட்ட உன்னதமான தேவன் நம்முடைய சிறிய யோபுவினிடத்தில் பேசுவதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறோம். பெருங்காற்றிலிருந்து யோபுவுக்கு இந்த தேவன் உத்தரவு கொடுக்கிறார். யோபு அறிவில்லாமல் இந்த கேள்விகளைக் கேட்டிருந்தான். அந்தக் கேள்விகளுக்கு பதில் கூறாமலே தேவன் அவன் மீது சரமாரியாக கேள்வி மழையைப் பொழிகிறார். "அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிற இவன் யார்? இப்போதும் புருஷனைப் போல இடைகட்டிக் கொள். நான் உன்னைக் கேட்பேன். நீ எனக்கு உத்தரவு சொல்லு" என்றார்.

இந்தக் கேள்வியை படித்து, அதன் பொருளை உணர்வது ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும், தன் விசுவாசத்தை ஊன்றக்கட்ட உதவும். அதோடு, தேவன் இல்லை என்று கூறும் நாஸ்திகர்களுக்கும், அஞ்ஞானிகளுக்கும் ஒரு சவாலாகவும் அமையும். எப்பேர்ப்பட்ட கடினமான இருதயத்தை உடையவனாயிருந்தாலும், இந்த கேள்விகள் அவனை ஒரு உலுக்கு, உலுக்கிவிடும் என்பதில் ஐயமில்லை [யோபு 38-ம் அதிகாரம் முதல் 41 வரை]. அநேக விதமான கேள்விகள் யோபுவைப் பார்த்து கேட்கப்பட்டது. அவற்றையெல்லாம் புரிந்து கொள்வது, விளங்கி கொள்வது கஷ்டம் தான். இவை எல்லாம் கேட்கப்பட்டதன் முக்கிய நோக்கம் என்னவெனில், இப்பூமியைப் பற்றியும், மனிதனுடைய மனம், மிருகங்கள், வெளிச்சம் போன்ற இவற்றைப் பற்றியே சரியாக மனிதனால்

புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், அப்பேர்ப்பட்ட சர்வ வல்லவரைப் பார்த்து இது சரி, இது தவறு, இது நியாயம், அநியாயம் என்று கூறக் கூடிய நிலையில் மனிதன் எப்படி இருக்க முடியும்?

## முதலாவது, உலகத்தைப் பற்றியும், அதன் ஆரம்பத்தைப் பற்றியும் தேவன், யோபுவைப் பார்த்து கேட்ட கேள்விகள்:-

"நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிற போது நீ எங்கே இருந்தாய். நீ அறிவாளியானால் அதை அறிவி. அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின் மேல் நூல் போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு. அதன் ஆதாரங்கள் எதின் மேல் போடப்பட்டது. அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்?
[யோபு 38 : 4 - 6].

இப்பொழுது பூமி இருக்கும் இடத்திலே இராமல் வேறு எந்த இடத்தில் இருந்தாலும், பூமியில் உயிரினங்கள் இருக்க முடியாது என்பதை விஞ்ஞானிகள் எல்லோரும் ஒத்துக் கொள்ளுகின்றனர். காரணம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம் கொஞ்சம் குறுகினாலும், பூமியிலுள்ள யாவும் வெந்து சாம்பலாகி விடும். கொஞ்சம் அதிகரித்து சென்றாலும் பூமியிலுள்ள யாவும் உறைந்து போகும் என்கின்றனர். பூமி எந்த இருசிலே இருந்து கொண்டு தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் எப்படி சுற்றி வருகிறது என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

யார் சமுத்திரத்தை கதவுகளால் அடைத்தது [யோபு 38 : 8 - 11.] யார் சமுத்திரத்தின் அலைகள், முழு பூமியையும் முழுகடிக்காமல் பாதுகாப்பது? விடியற்காலையை எப்பொழுதாவது யாராவது செய்தது உண்டா? இருளை அகற்றும் ஒளியை வரும்படி செய்தவர் யார்? [யோபு 38 : 12 - 15]. இந்த உலகத்தில் உள்ள எந்த பெரிய விஞ்ஞானியும் விடியற்காலையை உண்டாக்க முடியாது. கதிரவன் வானத்திலே கம்பீரமாக செல்வதை பார்க்கும்போது, தேவனுடைய மகிமையைத் தான் அது பறை சாற்றுகிறது.

யாரேனும் சமுத்திரத்தின் அடித்தலங்கள் மட்டும் புகுந்திருக்கிறார்களா? [யோபு 38 : 16]. இன்னும் சமுத்திரத்தைப் பற்றி மனிதனுக்கு அநேக காரியங்கள் தெரியாது.

வெளிச்சம் வாசமாயிருக்கும் இடம் எங்கே என்று தெரியுமா? இருள் குடி கொண்டிருக்கும் ஸ்தானமெங்கே? [யோபு 38 : 19 - 21]. வெளிச்சம் என்றால் என்ன? சூரியனிடத்தில் இருந்து வரும் ஒளி மாத்திரம் அல்ல. ஏனெனில் சூரியன் படைக்கப்படுவதற்கு முன்பே வெளிச்சம் இருந்திருக்கிறது [ஆதி 1 : 3]. இன்று விஞ்ஞானிகளும் இதை ஒப்புக் கொள்ளுகின்றனர். இருள் என்றால் என்ன? வெளிச்சம் இல்லாமை என்பீர்கள். மறுபடியும் வெளிச்சம் என்றால் என்ன? மனிதன் இன்னும் அதைப்பற்றி சரியாக அறியாதவனாக இருக்கிறான். உறைந்த மழையின் பண்டசாலைக்குள் பிரவேசித்தாயோ? [யோபு 38 : 22, 23].

இயற்கையின் அற்புத படைப்பு தண்ணீர். தண்ணீர் போல அதே மாதிரி எதுவும் கிடையாது. தண்ணீர், மழை, பனி, நீராவி என்று மாற்றப்படுவது உயிரினங்கள் வாழ அவசியம். இரண்டு பனிக்கட்டிகள், ஒரே மாதிரி ஒன்றைப் போலவே வடிவம் உள்ளதாக இருப்பதில்லை. இன்னும் பனியின் உபயோகம் போன்ற அநேக காரியங்களை மனிதன் அறியாதவனாக இருக்கிறான்.

மனிதன் வசிக்காத வனாந்திரப்பகுதியில் மழையை வருஷிக்கப் பண்ணுவது யார்? [யோபு 28 : 25 - 28]. யாருடைய வல்லமையால் இந்த இடங்களுக்கு மழை கிடைக்கிறது. மனிதனுடைய சக்தி அல்ல. பின் யாருடையது? [யோபு 38 : 29, 30]. தண்ணீரின் விசேஷித்த தன்மைகளைப் பற்றி இன்னும் மனிதன் பூரணமாக அறியாதவனாக இருக்கிறான். இரண்டு வாயுக்களும் சேர்ந்து, அதாவது, ஆக்சிஜனும் ஹைட்ரஜனும் சேர்ந்து எப்படி தண்ணீராகிறது என்றும், தண்ணீர் வானத்தில் உறைந்து பெரிய பனிப்பாறைகளாக ஏன் விழுவது இல்லை என்றும் யாருக்கும் பூரணமாகத் தெரியாது. வானவெளியில் உள்ள கிரகணங்களை எல்லாம் கட்டுப்படுத்துவது யார்? [யோபு 38 : 31 - 33]. இந்தக் கிரகணங்களெல்லாம் பூமியின் ஆகர்ஷண சக்தியால் தாக்கப்பட்டு வருகிறது என்று ஐசக் நியூட்டன் கூறி இருக்கிறார். ஆனால் அந்த சக்தி என்றால் என்ன என்று கூறவில்லை. மின்னலைப் பிடித்து அனுப்ப முடியுமா! [யோபு 38 : 34, 35].

ஆகாயத்துருத்திகளில் உள்ள தண்ணீரைப் பொழியப் பண்ணுகிறவர் யார்? [யோபு 38 : 37, 38]. மனிதன் எதையும் படைக்க முடியாது. தேவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகளின் உபயோகத்தை அறிந்து கொண்டு, தன் நலனுக்கு அதை பயன்படுத்திக் கொள்ளலாம். இயற்கையின் சட்டத்தை மாற்றவும், மனிதனுக்கு சக்தி கிடையாது. காலையில் கிழக்கில் உதிக்கும் கதிரவனை வடக்கில் உதிக்க வைக்க கூடுமா. இவை எல்லாவற்றிலும் மனிதனுடைய, ஒன்றும் செய்ய இயலாத நிலமையைப் பார்க்கிறோம்.

## மரணத்தைப் பற்றிய கேள்விகள்

மரண வாசல்களைத் திறந்ததுண்டா? [யோபு 38 : 17]. எது ஜீவன்? எது மரணம்? ஒருவருக்கும் விளங்காது. இருப்பினும் இரண்டும் உண்மை என்றே எல்லோரும் ஒத்துக் கொள்வர். சாகாமல் மரணத்தை எந்த மனிதனாலும் கட்டுப்படுத்த இயலுமா?

## மனிதனுடைய உள்ளத்தைப் பற்றிய கேள்வி.

உள்ளத்தில் புத்தியைக் கொடுத்தவர் யார்? [யோபு 38 : 36]. உள்ளம் என்றால் என்ன? அது என்ன நிறம்? அதன் எடை என்ன? எப்படி ஒருவன் மற்றவனைக் காட்டிலும் வித்தியாசப்பட்டவனாக இருக்கிறான்? யாராலும் சரியாக விளக்க முடிவதில்லை.

## மிருகங்கள், பறவைகள், நீரில் வாழும் ஜீவராசிகளைப் பற்றிய கேள்விகள்.

[யோபு 38 : 39 - 41] —"நீ சிங்கத்துக்கு இரையை வேட்டையாடி, சிங்கக் குட்டிகள் தங்கும் இடங்களில் கிடந்து கெபியிலே பதிவிருக்கிற போது, அவைகளின் ஆசையை திருப்தியாக்குவாயோ? காக்கை குஞ்சுகள் தேவனை நோக்கி கூப்பிட்டு, ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது அவைகளுக்கு இரையை சவதரித்துக் கொடுக்கிறவர் யார்?"

"வரையாடுகள், மான்கள் குட்டிபோடுங் காலத்தை அறிவாயோ? காட்டுக் கழுதையை உண்டாக்கி, அதற்கு சுதந்திரம் கொடுத்து சுற்றி திரிய விட்டது யார்? காண்டாமிருகத்தை கயிறு போட்டு ஏரியிலே பூட்டுவாயோ?" மூர்ககத்தனமான காட்டு எருதைப் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டிருககலாம். "மயிலுக்குத் தோகையும், தீக்குருவிக்கு செட்டைகளையும் கொடுத்தது யார்? [யோபு 39 : 13—18]. குதிரைக்கு நீ வீரியத்தை கொடுத்தாயோ? [யோபு 39 : 19 - 24]. உன் புத்தியினாலே ராஜாளி பறந்து, தெற்குக்கு எதிராக தன் செட்டைகளை விரிக்கிறதோ? உன் கற்பனையினாலே கழுகு பறக்கிறதா? [யோபு 40 : 15 - 24]. லிவியாதானை ஒரு தூண்டிலினால் பிடிக்கக் கூடுமா?" [நீர் யானைப் போன்றதொரு மிருகமாக இருக்கலாம். இது ஒரு பெரிய முதலையோ, அல்லது இன்று மறைந்து விட்டிருக்கிற ஒரு கடல் மிருகமாக இருக்கலாம்.]

## மனிதனுடைய இருதயத்தை பற்றிய கேள்விகள்.

"நீ என் நியாயத்தை அவமாக்குவாயோ? நீ உன்னை நீதிமானாக்கிக் கொள்ளும்படிக்கு என்மேல் குற்றம் சுமத்துவாயோ? என்று கர்த்தர் யோபுவைப் பார்த்து கேட்டார் [யோபு 40 : 8]. இரண்டு காரியங்கள் மனிதனுடைய பலவீனத்தை சுட்டிக் காட்டுகிறது.

ஒன்று, தேவனுடைய வல்லமை. "தேவனுடைய புயத்தைப் போல் உனக்கு புயமுண்டா. அவரைப் போல இடி முழக்காய் சத்தமிடக் கூடுமோ." [யோபு 40 : 9]. மனிதனால் கூடாது.

இரண்டு, தேவன் ஒருவரே மனித இருதயத்தை அறிந்து, அதில் காணும் அகந்தை, மேட்டிமை, பொறாமை, என்னும் பாவங்களை கண்டு அவனை தண்டிக்கவல்லவர்.

மேலும் கர்த்தர் யோபுவை பார்த்து, "நீ உன் கோபத்தின் உக்கிரத்தை வீசி, அகந்தை உள்ளவனை எல்லாம் தேடிப் பார்த்துத் தாழ்த்தி விட்டு, பெருமையுள்ளவனை எல்லாம் கவனித்து, அவனைப் பணியப் பண்ணி விட்டு வா ......................... அப்பொழுது உன் வலதுகை உனக்கு ரட்சிப்பு உண்டு பண்ணும் என்று சொல்லி நான் உன்னைப் புகழுவேன்" [40 : 11 - 14] என்றார்.

யோபுவுக்கு சரியான அடி. தேவனில்லை என்று கூறுபவர்களுக்கு ஒரு சவாலான கேள்வி. இதற்குப் பிறகு தான் யோபு தன்னிலே உணர்ந்தான். "என் காதினால் உம்மைக் குறித்து கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மை காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து தூளிலும், சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப் படுகிறேன் என்றான்" [யோபு. 42 : 5, 6].

பாடம் 16

# விசுவாசத்தின் வெற்றி

புயலுக்குப்பின் அமைதி என்பார்கள். ஆம்! யோபினுடைய வாழ்க்கையின் இறுதிக் கட்டம். இது வரைக்கும் அவனுடைய வாழ்க்கையின் இருண்ட காலத்தில் நடந்த ஒவ்வொரு சம்பவங்களாகப் பார்த்து வந்தோம். இப்பொழுது புயல் ஓய்ந்து, தேவனுடைய அன்பாகிய சூரிய ஒளி அவன் வாழ்வில் வீசப்பார்க்கிறோம். இது தான் விசுவாசத்தின் வெற்றி. இது வரைக்கும் சொல்லொண்ணு துயரங்களை தாங்கிய நம் நண்பன் யோபுவோடு நாமும் மகிழ்ச்சிக் கடலில் மிதப்போம்.

அவனுடைய வாழ்க்கையைப் போன்றே நம்மில் அநேகருடைய வாழ்க்கை இருக்கலாம். முதலில் அவனுடைய வாழ்வில் மௌனம், ஒன்றும் செய்ய முடியாத நிலை, கேள்வி கேட்கும் படலம், அமைதியின்மை, நம்பிக்கை இன்மை, விசுவாசத்தின் பலன், பிறகு அமைதி என்று ஒரு சக்கரம் போல சுற்றி வந்தது. யோபு தன்னிடத்தில் உள்ள யாவற்றையும் பறி கொடுத்தான். இருப்பினும் அவன் ஆத்துமாவை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் ஆரோக்கியம், சொத்து, குடும்பம், நண்பர்கள் எல்லாம் பறிபோயின. ஆனாலும் நங்கூரம் போல் விசுவாசத்தினுல் உறுதியாய் பற்றி இருந்தான். மேலும் " நான் அறிந்திருக்கிறேன்" என்றான். விசுவாசத்தினுல் சிலவற்றை தெளிவாக அவன் காண முடிந்தது. ஆனால் எல்லாம் அவனுக்குத் தெரியாது [யோபு 19 : 25 - 26]. அவன் விசுவாசம் இந்த நம்பிக்கையை ஊட்டிற்று. ஆம்! நம்பிக்கை, ஆத்துமாவின் நங்கூரமாக அவனுக்கிருந்தது. [எபி 6 : 19].

"ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார். அவர் என்னை சோதித்த பின் நான் பொன்னாக விளங்குவேன்" என்றான் [யோபு 23 : 10]. "அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்றான்" [யோபு 13 : 15]". என் நீதியை கெட்டியாய் பிடித்திருக்கிறேன்" என்றான் [யோபு 27 : 6].

இவைகள் தான் யோபுவின் நங்கூரங்கள். சில காரியங்களைத் தான் நாம் திட்டமாக அறிய முடிகிறது. ஆனால் தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்ற வாக்குத்தத்தம் நமக்கு உண்டு. நாமும் யோபுவைப்போல் அவர் வழியில் சென்றால், நாமும் யோபுவோடு சேர்ந்து "நான் பொன்னாக விளங்குவேன்" என்று சொல்லலாம். நாம் நித்தியத்தைப் பற்றிக் கொண்டு, உலகத்தை சமாளிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இதுவே நம்முடைய வேலை. நங்கூரம் புயலை நிறுத்த முடியாது. ஆனால் கப்பல் புயலோடு போராடுகையில் கப்பலை பாதுகாப்பாக வைக்க இது உதவுகிறது.

நம் ஜீவியமாகிய நங்கூரத்தை மனிதர்களோடு கட்டுவோமானால், அவர்களெல்லாம் நம்மிடத்தில் இருந்து எடுத்துக் கொள்ளப்படும் நாள் வரும்பொழுது, நமக்கு ஒன்றுமே மீதி இருக்காது. நம் ஆத்தும நங்கூரத்தை இயேசுவோடு கட்டுவோம்.

இது விசுவாசம் தரும் வெற்றி. அதன் பலாபலனை ஆராய்வோம்.

1. தேவன் தம்முடையவர்களைக் காத்துக் கொள்வார், தம்முடைய ஊழியக்காரர்களை கைவிட மாட்டார்.

அ] அவர், விரோதிகளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார். யோபுவின் மூன்று நண்பர்களும் தங்கள் புத்தியீனத்திற்காக சர்வாங்க தகன பலிகளை இடும்படி தேவனால் கட்டளையிடப்பட்டனர். காரணம், கள்ள போதகம், அநீதியான குற்றச்சாட்டு.

ஆ] யோபுவின் போதகத்தை தேவன் அங்கீகரித்தார். [யோபு 42 : 7, 8, 9]

இ.] தெய்வீக ஆசீர்வாதத்தை அளித்தார். [யோபு 42 : 10 - 17]

2. விசுவாசத்தின் பலனை எல்லாம் இந்த ஜீவியத்திலே காண முடியாது :

அ.] சிலர் யோபுவைப் போல்வே தங்களுக்கும் அமைந்து, சொத்து சுகங்களோடு ஜீவியம் முடிவடையும் என்று எதிர் பார்க்கின்றனர். இது எப்பொழுதும் அப்படி உண்மையாகாது.

ஆ.] இயேசுவின் அப்போஸ்தலனான பவுலின் தலையைத் தான் மனிதர்களால் வாங்க முடிந்ததே தவிர அவன் இருதயத்தை வாங்க முடியவில்லை. [2 தீமோ 4 : 6 - 8]. எத்தனையோ இருதய வலிகள், துன்பம் இவற்றிற்கிடையே தான் வெற்றி பெற்றான்.

3. நாமும் துயரத்தின் மத்தியில் வெற்றி காண முடியும் : துயரத்திற்குப் பின் அல்ல. துன்பம் என்ற உலையினுள் சென்றால் தான் வெற்றி காண முடியும்.

4. வெற்றி நமக்கு அவசியம் : நாம் பரத்தை நோக்கியவர்களானால் வெற்றி காண்போம் [வெளி 7 : 14]. நமக்கு முன் வாழ்ந்தவர்கள் மனிதர்கள் தான். அவர்களால் முடியும் என்றால், ஏன் நம்மால் முடியாது!

5. வெற்றி மற்றவர்களுக்காகவும் அவசியம் :
துன்பம் வந்தால் சோர்ந்து விசுவாசத்தை விட்டு விடுகிறோம். கூடாது. மற்றவர்கள் நம் தோல்வியைக்கண்டு தடுக்கி விழுவர். அதற்கு இடம் தரலாகாது.

6. அறியாமை என்கிற இருளின் மீது விசுவாசத்தின் வெற்றி :
அறியாமை என்ற இருளினுள் சூரிய ஒளி மங்கி விடுகிறது. இருளை போக்க ஒரே வழி, தேவனுடைய வார்த்தை [சங் 119 : 30]. இந்த தேவனுடைய வார்த்தை தான் கர்த்தரின் உண்மை சொரூபத்தை யோபு காணும்படி ஒளியைத் தந்தது. [யோபு 42 : 5].

7. **பாவம் என்கிற இருளின் மீது வெற்றி :**

அநேகர் பாவ பாரத்தால் அழுந்தப்பட்டு தொய்ந்து போயிருக்கின்றனர். அந்தகாரத்தில் நிம்மதி இழந்து அலேகின்றனர். நீதியின் சூரியனும் இயேசுகிறிஸ்து, ஒளியைக் கொடுக்கவே இவ்வுலகத்திற்கு வந்தார். அவராலேயன்றி, சாத்தானே விட்டு தேவனிடத்தில் ஒப்புரவாக முடியாது.

8. **மனக்கசப்பு, நம்பிக்கை இழப்பு என்கிற இருளின் மீது வெற்றி :**

கருமை மேகம், சூரியனே மூடிக் கொண்டிருக்கும் போதும் சூரியன் அங்கே தான் இருக்கிறுன். அதனுடைய பிரகாசமான ஒளிக்கதிர் கருமையான மேகத்தை ஊடுருவிச் செல்வதை பார். நீலவானம், கருமையான முகிலேக் காட்டிலும் பெரியது என்பதை மறக்க வேண்டாம்.

9. **மனக்கசப்பு, ஒவ்வொரு பிரச்சினையையும் மிகைப்படுத்தும் :**

ஜீவியத்தில் ஏற்ற தாழ்வு உண்டு என்பதை மறவாதீர். எல்லாருக்கும் ஒரே மாதிரியான நிலே இருக்காது. இரவு பகல் மாறி மாறி வருவதைப் போல், இன்பதுன்பமும் அப்படியே. ஆகவே துயர மேகங்கள் சூழ்ந்து கொள்ளும் பொழுது பயந்து விட வேண்டாம். உங்கள் கண்களே பரத்துக்கு ஏறெடுத்துப் பாருங்கள். நீண்ட குறிக்கோளுடன் எதையும் நன்மைக்கென்றே எடுத்துக் கொள்ளுங்கள். பவுல் கூறுகிறுர், "ஆனபடியினுலே, நாங்கள் சோர்ந்து போகிறதில்லே. எங்கள் புறம்பான மனிதன் அழிந்தும் உள்ளான மனுஷனுனது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது. மேலும், காணப்படுகிறவைகளே அல்ல, காணப்படாதவைகளே நோக்கியிருக்கிற நமக்கு அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது. ஏனென்னில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்
[2 கொரி 4 : 16 - 18].

10. **எப்பொழுதும் நமக்கு உதவி செய்பவர் கர்த்தரே என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் :**

துயரத்தை தனி மனிதனுல் மேற்கொள்ள முடியாது. நாம் துயரக்கடலில் அமிழ்ந்து போகாமல் நம்மைத் தாங்குவது தெய்வீக உதவி. நம்மால் குணப்படுத்த முடியாத துயரங்கள் உண்டு. மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகள் உண்டு. எந்த மனிதனுலும் ஆற்ற முடியாத வருத்தங்கள் உண்டு. யாராலும் அழிக்க முடியாத குற்ற உணர்வு உண்டு.

மனித வார்த்தைகள் ஒருவாறு ஆறுதல் படுத்த முனேந்தாலும் நம்மை முழுவதுமாக அவைகள் தேற்ற முடியாது. நம்மில் ஒவ்வொருவனும் ஆழமான துன்பக்கடலில் சென்று, நம்பிக்கை அற்ற நிலேக்கு சென்றிருக்கிறேம். யாரும் விதி விலக்கு இல்லே. ஆனுல் நீதிமானுக்கோ, தேற்றப்படத்தக்க வாக்குறுதிகள் அநேகம் உண்டு. சங்கீதக்காரன் தாவீது கூறுகிறுர். "தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும் ஆபத்து காலத்தில்

அனுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச் சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்" [சங் 46 : 1, 2].

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லப்பட்ட ஆறுதல் மொழி "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் [1 பேதுரு. 5 : 7]. "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று அவர் சொல்லி இருக்கிறாரே" [ எபி 13 : 5].

**கடைசியாக, விசுவாசம் நம் வெற்றியின் அடையாளம் :**

தாவீது கூறி இருக்கிறார், "நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டு போயிருப்பேன் [சங் 27 : 13]. நன்றி தெரிவித்தல், துக்கத்தை துரத்தும் சக்தியுள்ளது. துயரத்தின் மத்தியில், எவ்வளவு தடவை நமக்குக் கொடுக்கப்பட்ட மற்ற ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றி தெரிவிக்காமல் இருந்திருக்கிறோம்.

நாம் தேவனிடத்தில் நெருங்கி ஜீவிக்க உதவி செய்வது இந்த துன்பங்கள் தானே. நாம் நம்மீது நம்பிக்கை வையாமல், தேவனைச் சார்ந்திருக்க உதவி செய்வது இந்த கஷ்டங்கள் தானே.

பாடிச்செல்லும் அருவியின் வழியில் இருக்கும் கல்லை எடுத்து விட்டால் கீதம் எப்படி வரும்? யோபுவின் வாழ்க்கையில் அவருடைய விசுவாசமே வெற்றியைத் தேடித் தந்தது. நம் ஒவ்வொருவருக்கும் அப்படியே.

ஆகையால் தாவீதோடு சேர்ந்து நாமும் "நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். உமது கோலும், உமது தடியும் என்னைத்தேற்றும்" என்று கூறுவோமா!

---

பாடம் 17

# கஷ்டம் ஏன் வருகிறது

நம்மைச் சுற்றியுள்ள இப்பரந்த உலகத்தில் வாழும் மனிதன் வலி, கஷ்டம், ஏமாற்றம், மரணம், பசி, பட்டினி, துயரம் இவற்ருல் அலேக்கழிக்கப்பட்டு, எனக்கு ஏன் இந்த கதி? ஏன் இவைகள் எனக்கு நேரிட வேண்டும்? என்று கதறும் குரலோசையை நான்கு திசைகளில் இருந்தும் கேட்கிருேம். சிந்திக்கும் திறனுள்ள எந்த மனிதனும் கேட்கும் கேள்வி, ஏன்? ஏன்?. யோபுவும் கூட ஏன் என்று கேட்டிருக்கிருன். இது ஒரு நாஸ்திகனுடைய கேள்வியாளுல் பரவாயில்லே. தேவனுடைய பிள்ளேயின் இதயத்தில் இருந்து கிளம்பும் ஈனக் குரலல்லவா? மனிதனுக்கு வரக்கூடிய கஷ்டத்தைப் பற்றிய பிரச்சனே ஒரு புதிரானது. ஒரே ஒரு காரணத்தைக் கொண்டு விளக்கம் கூற முடியாது. பல காரியங்களும் சம்பந்தப்பட்டு இருக்கலாம். எந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சனே சம்பந்தப்பட்ட எல்லா காரணங்களேயும் அலசி ஆராய முற்பட்டால் யோபுவைப் போல் நாமும், "ஆகையால் நான் எனக்கு தெரியாததையும் என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன்" என்று பிறகு வருத்தப்பட நேரிடும்.

"யோபு" புஸ்தகம் மேற்கண்ட பிரச்சனேகளேக் குறித்து சிறிது விளக்கம் கொடுக்கிறது. கிறிஸ்துவும் இந்த பிரச்சனேகளேப் பற்றிய புதிரை ஒருவாறு விடுவிக்கின்ருர். இருப்பினும் நாம் அறியாத எத்தனேயோ காரியங்கள் உள்ளன. பொதுவான அடிப்படையில், எல்லா கஷ்டங்களுக்கு பாவமே மூலக்காரணம். தேவன் எல்லாவற்றையும் படைத்து விட்டு, "அது மிகவும் நன்ருயிருந்தது" என்ருர். [ஆதி 1 : 31]. ஆகவே தேவன் படைத்த படைப்பில் ஒன்றும் கோளாறு இல்லே. சாத்தான் பாவத்தையும் துயரத்தையும் இந்த உலகத்தில் கொண்டு வந்தான். ஆகவே நாம் மிகவும் அவதிப்பட்டு, யார் மீதாவது நம் கசப்பை வீசலாம் என்று சோதிக்கப்படும் போது, இறைவன மீது அல்ல, சாத்தானின் மீதே நம் கோபத்தை செலுத்த வேண்டும்.

யோபுவின் வாழ்க்கையில் நாம் என்ன பார்க்கிருேம்? ஒரு குறிப்பிட்ட கஷ்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட காரணம் தான் என்று கூற இயலாது. பல அம்சங்களேயும் நாம் கவனித்தல் அவசியம். நாம் அடிக்கடி தவருக புரிந்து கொண்டு உபயோகிக்கக்கூடிய சொற்ருெடர், "அது தேவனுடைய சித்தம்" இப்புவியில் வரும் எல்லா துன்பங்களுக்கும் இந்த சொற்ருெடரையே உபயோகிக்கக் கற்றுக் கொண்டிருக்கிருேம். அதை நன்ருக ஆராய்ந்து பார்த்து அறிதல் வேண்டும்.

[உ—ம்] ஒரு குழந்தை காரில் அடிப்பட்டு மரிக்கிறது. ஏன் இந்த குழந்தையை தேவன் நம்மிடத்தில் இருந்து பறிக்க வேண்டும்? இது

தேவனுடைய சித்தமா? இந்த சொற்றொடரை முதலில் விளக்குவோம். தேவனுடைய சித்தம் என்று கூறுகிறபோது, இரண்டு காரியங்களை கவனிக்க வேண்டும்.

1. தேவனுடைய "வேண்டுமென்கிற சித்தம்":-

தேவன் எல்லாவற்றையும் மனிதன் அனுபவிக்கப் படைத்தார். அவற்றை ஆண்டு அனுபவிக்க இயற்கை நியதிகளையும் கொடுத்திருக்கிறார். மனிதன் அவைகளுக்கு கீழ்படிந்தால் ஆசீர்வதிக்கப்படுகிறான்.

2. தேவனுடைய அனுமதிக்கின்ற சித்தம்:-

அணுவும் அவரின்றி அசையாது. வானத்தையும், பூமியையும் தேவன் கட்டுப்படுத்துகிறார். மனிதனோ, சாத்தானோ அல்ல. மனிதனுக்கு, சுயமாக தேர்ந்தெடுத்து செயலாற்றும் திறனையும் கொடுத்து இருக்கிறார். ஆகவே மனிதன் வேண்டுமானால் தெய்வீக சட்டத்தை மீறலாம். அப்பொழுது அதன் பிரதி பலனையும் அவன் அனுபவிக்க வேண்டும். உத்தமனான யோபு கஷ்டப்பட்டது தேவனுடைய சித்தமா? ஆம். ஆனால் அவர் அனுமதிக்கின்ற சித்தம். சில காரணங்களிநிமித்தம் அவர் அனுமதித்தார்.

**கஷ்டங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் :**

1. மனிதன் தனக்குத் தானே வருவித்துக் கொள்வது.

எப்பொழுது எல்லாம் தெய்வீக பிரமாணத்தை மீறுகிறோமோ ஆவிக்குரிய பிரமாணங்களானாலும் சரி, சரீரப்பிரகாரமான பிரமாணங்களானாலும் சரி, பிரதி பலன் வருவது நிச்சயம்.

**இதிலும் மூன்று வகை உண்டு :**

அ. வேண்டுமென்றே வருவித்துக் கொள்வது.

ஆ. அஜாக்கிரதையினால் வருவித்துக் கொள்வது.

இ. அறியாமையினால் வருவித்துக் கொள்வது.

இதை அறிந்து கொண்டால் மனிதன் அநேக தொல்லைகளை தவிர்க்க முடியும். தேவன் மனிதனுடைய நல்லுக்காக இயற்கை சட்டங்களை கொடுத்து இருக்கிறார். மனிதன் தெய்வீக சட்டத்தை மீறுகிறான். மனிதனுக்கு தேர்ந்தெடுத்து செயலாற்றத்தக்க திறன் கொடுக்கப்பட்டிருப்பதனால் அவனை தேவன் கட்டுப்படுத்துவதில்லை. இந்த சுதந்திரத்தை மனிதன் சில சமயங்களில் தன் அழிவுக்கு பயன்படுத்துகிறான். [உ—ம்] தற்கொலை. அஜாக்கிரதையாலோ, அறியாமையாலோ, இயற்கை நியதியை மீறுகிறபோது மனிதன் பாதிக்கப்படுகிறான் [உ—ம்] மின்சாரக் கம்பியை தொடுவது. அப்படியே ஆவிக்குரிய தேவனுடைய பிரமாணங்களும், மனிதனுடைய நல்லுக்குத் தரப்பட்டு உள்ளன.

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" [கலா 6 : 7, 8] என்று பார்க்கிறோம். பாவத்தை விதைக்கிறவன் பாவத்தின் பிரதிபலனை ஆவிக்குரிய ஆத்தும அழிவை அடைவான். [உ—ம்] நாவை சரியாக உபயோகிக்காமல் இருத்தல்.

2. மற்றவர்களால் வரும் கஷ்டங்கள் :

[உ—ம்] யுத்தம். எத்தனேயோ கஷ்டங்கள் மற்றவர்களால் நமக்கு வரும். கிறிஸ்துபட்ட கஷ்டம் அவரால் உண்டானதல்ல. நீதிமான் என்ற காரணத்தால் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. இயேசு கண்ணீர் விட்டிருக்கிறுர். [யோவான். 11 : 35 தாகமடைந்து இருக்கிறுர் [யோவான். 19 : 28 ,துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய் தீங்கு நினேத்து அவன் பேரில் பற்கடிக்கிறுன் என்றுன் சங்கீதக்காரன் தாவீது [சங் 37 : 12]. ஆபேல் நீதிமானுக இல்லே எனில் காயினுல் கொல்லப்பட்டிருக்க மாட்டானே. இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், நாம் மற்றவர்களால் துன்பப்படும் போது பதிலுக்கு பதில் செய்யாமல், கசப்பான வைராக்கியத்தில் இருக்கக்கூடாது.

3. தேவனுடைய சிட்சை:

"கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறுரோ அவனே அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனேயும் தண்டிக்கிறுர்" [எபி. 12 : 6]. ஏன்? நம் நலனுக்காக. எவ்வாறு? யாருக்கும் நிச்சயமாகத் தெரியாது. ஆபிரகாமும் யோபும் சோதிக்கப்பட்டனர். தேவன் யாரையும் சோதிக்கமாட்டார். [யாக் 1 : 13]. சாத்தான் நம்மை சோதிக்க தேவன் அனுமதிக்கிறுர். பவுலின் விசுவாசத்தை சாத்தான் சோதிக்க தேவன் அனுமதித்தார்[2 கொரி 12 : 7]. ஏன் என்று நமக்கு தெரியாது. வீணில் குழப்பாமல், என்ன பாடத்தை இதில் கற்றுக் கொள்வோம் என்று பார்க்கலாம்.

கஷ்டத்தை அலசி ஆராயும் போது,

அ. சில கஷ்டங்கள் நம்மால் தவிர்க்க முடியும்.

ஆ. இன்னும் சில கஷ்டங்களே குணப்படுத்தலாம்.

இ. சில கஷ்டங்களே தாங்கிக் கொள்ளலாம்.

4. எல்லாம் நம் பிரயோஜனத்திற்கு உபயோகிக்கலாம் :

கஷ்டங்கள் எப்படிப்பட்டவை என்று தேவனுடைய வசனம் கூறுகிறது என்றுல்,

அ. சில நிச்சயமானவை

ஆ. நிச்சயமில்லாதவை

இ. வேதனேயுள்ளது.

ஈ. தற்காலிகமானது.

உ. அனுகூலமானது.

பெரும்பாலும் கஷ்டங்கள் வரும்போது, அதைப்பற்றிய நம் மனுேநோக்குத்தான் நம்மை அழிக்குமே தவிர, கஷ்டங்கள் அல்ல.

தவறான மனோ நோக்கு:-

1. ஏன் தான் இந்த கஷ்டங்கள் எனக்கு வந்ததே என்று தேவனிடத்தில் கோபத்தை காட்டுதல். அவரை குற்றம் சுமத்துதல்.

2. அதிலிருந்து மனக்கசப்போடு, மனந்திரும்பாத நிலையில் இருத்தல்.

சரியான மனோ நோக்கு:-

கர்த்தருடைய சிட்சையை சகித்துக் கொள்ளுதல் [எபி 12 : 5 - 10]. "கிறிஸ்து குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலை கற்றுக் கொண்டார்"[எபி 5 : 8].

நம்முடைய தற்போதைய கஷ்டம், தேவனுடைய கையிலிருக்கும் உளியைப் போன்றது. அதனால் நம்மை நித்தியத்திற்கு ஆயத்தம் செய்கிறார். துன்பப்படும் போது, சந்தோஷப்பட வேண்டும் [மத் 5 : 11, 12]. இது முடிகிற காரியமா? பவுலால் முடிந்தது. அவர் கூறுகிறார், "என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்" [2 கொரி 12 : 7 - 10].

கஷ்டங்களினால் வரும் அனுகூலங்கள்:-

எல்லாரும் துன்பங்களிலிருந்து எப்படி காப்பற்றப் படுவது என்று கூற முயற்சிக்கிறார்களே தவிர, அதை எப்படி அனுகூலமாக்கிக் கொள்வது என்று கூறுவதில்லை. உண்மையிலே துன்பம், நாம் எப்படிப்பட்ட மனிதர் என்று காட்டுகிறது [நீதி 24 : 10].

கஷ்டங்கள், ஜீவியத்தின் முதன்மையான நோக்கத்தை அடைய உதவி செய்கிறது. வாழ்க்கையின் முதன்மையான நோக்கம் பரிசுத்த ஜீவியம். அதில் சந்தோஷம் என்பது கனிகள்.

துன்பம், தேவனை சார்ந்திருக்க உதவுகிறது. துன்பத்தில் தான் அநேகர் தேவனை தேடுகின்றனர்.

துன்பம், தெய்வீக சித்தத்திற்கு கீழ்படிய போதிக்கிறது. மனிதனுடைய முரட்டாட்டமே அநேக குழப்பங்களுக்கு காரணம்.

துன்பம், எதன் மீது உண்மையான பற்றை வைக்க வேண்டும் என்று போதிக்கிறது.

துன்பம், வாழ்க்கையின் சந்தோஷத்தை சுவைக்க உதவுகிறது [பிர. 7 : 3].

துன்ப மழை, ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்க உதவுகிறது. துன்பத்தினால் தான் மனத்தாழ்மை, பொறுமை, நம்பிக்கை, இரக்கம், மற்றவர் துயர் அறியும் திறன் இவைகளை அடைய முடிகிறது.

---